விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 05 வியாழக்கிழமை (19.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அதிகாரப் பரவலாக்கலே இலங்கைக்கு பொருத்தமானது

### எஸ்.எம்.கிருஸ்ணா யாழில் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பொதுவான அடிப்படை அரசியல் உரிமைகளை வழங்கும் அதிகாரப் பரவலாக்கல் முறையே பொருத்தமானது என இந்தியா கருதுகின்றதென இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு முன்பாக நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)



வீடு கையளிப்பு நிகழ்வில்...



துவிச்சக்கர வண்டி கையளிப்பு நிகழ்வில்...

## அரசு-கூட்டமைப்பு பேச்சுக்கு இந்திய மத்தியஸ்தம் தேவை

### யாழ். ஆயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை இந்தியா மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக நின்று வழிநடத்த வேண்டும் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார். இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு அவர் வழங்கிய அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசானது தமிழ் சிறுபான்மையினருக்கு பொருத்தமான அரசியல் தீர்வொன்றை அடைவதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கையில் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இது ஒரு வழி என இதனை இந்திய வெளிவிவகார அமைச்சு வரவேற்றிருக்கிறது. ஆனால் இலங்கை அரசானது பேச்சுக்களின் வழி மாகாண சபைகள் இயங்குவதற்கு தேவையான அதிகாரங்களை வழங்குவதில் எள்ளளவும் விட்டுக் (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புக்கு நிபந்தனை விதிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுக்களை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை நியமிக்கும்வரை இந்தப் பேச்சுக்கள் நடைபெறாது என்று வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம், நேற்று, இன்று என இந்த மாதத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் பேச்சுக்களை நடத்த அரசாங்கம் நாள் குறித்திருந்தது. எனினும் நேற்று முன்தினம் பேச்சுக்களுக்காகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு அரசு பிரதிநிதிகள் வராததால், ஏமாற்றத்துடன் திரும்பியது.

அதேவேளை, அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரம் பேச முடியாது என்றும் எல்லாக் கட்சிகளுடனும் பேசப்பட வேண்டும் என்றும் கூறியுள்ள வெளிவிவகார அமைச்சு, அதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இடம் பெற வேண்டும் (20ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆவது திருத்தம் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?

### ஐ.தே.க. கேள்வி

(கொழும்பு)

அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இப்போது வந்திருப்பதாக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருக்கின்றது.

13வது திருத்தத்திற்கும் மேலாக சென்று இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த பின்னரும் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பதாகவும் அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐ.தே.கவின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக, அரசாங்கத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுமூலமான தீர்வையே கூட்டமைப்பு விரும்புகிறது

### சம்பந்தன் தெரிவிப்பு



(லண்டன்)

பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வையே நாம் ஏற்படுத்த விரும்புகிறோம். அது முறையாக நடைபெற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,


அரசுடனான பேச்சுவார்த்தைகள் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெற்று இருக்கவேண்டும். ஆனால் முன்பதாகவே அரச தரப்பில் இருந்து பேச்சுவார்த்தை நடைபெறமாட்டாது என சில கருத்துக்கள் வெளி வந்தன.

நாங்கள் அரசாங்கத்தால் நியமிக்க இருக்கும் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு எமது பிரதிநிதிகளின் பெயரை குறிப்பிடவில்லை என்பதை காரணமாக வைத்தே பேச்சு முறிபடைந்துள்ளது.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என எதிர்பார்த்து எமது முடிபுகளை எடுப்போம்.

எங்களைப் பொறுத்தவரை ஸ்தம்பிதம் ஏற்பட்ட பின்னர் ஜனாதிபதியுடன் பேச்சை ஆரம்பித்து, எங்களுக்குள்ளே நடந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண கலாசார நிலையம்



900 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள யாழ். கலாசார நிலையத்திற்கான கட்டிட வடிவமைப்பு போட்டியின் வெற்றியாளரை இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இப்போட்டியின் முதல் 3 வெற்றியாளர்களுக்கு கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம் கிருஸ்ணா, இலங்கையில் பொருளாதார அபிவிருத்திஅமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் விருதுகளை வழங்கினர். (20ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் வீட்டு திருமணத்தை சரவணா பட்டுப்புடைவையினால் அலங்கரியுங்கள்.

நல்லூர் சரவணா ரெக்ஸ்

Nallur Saravana Tex

நல்லூரில்
இல. 526,529, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2221723

யாழ் நகரில்
இல. 770,772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 0421

வடமராட்சியில்
இல. 171 பிரதான வீதி
(சம்பத் வங்கிக்கு அருகாமை
நெல்லியடி,
தொ.பே: 021 226 2992

## சுஸ்மா சுவராஜ் இலங்கை வருவார்



இந்திய மக்களவைஎதிர்க் கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றுடன் விரைவில் இலங்கை வருவுார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா அறிவித்துள்ளார்.

சுஸ்மா சுவராஜ் கடந்த வருடம் இலங்கை வரவிருந்த நிலையில் இந்திய அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக அவரது விஜயம் திட்டமிட்டபடி அமையவில்லை.

எனி (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை முதல்வர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய மாணவர் கல்வி அபிவிருத்திபிரதிக்கல்விப்பணிப்பாளர் இ.குணநாதன் கலந்து கொள்கிறார். (ச)

# கப்பம் கோரிய பெண் கைது

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவர்களை கண்டுபிடித்துத் தருவதாகக் கூறி முல்லைத்தீவு பகுதி மக்களிடம் கப்பம் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த ஜாஎல மாபிம மகேவிட பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் குறித்த பெண் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் குறித்து பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலக தகவல்படி தெரியவருவதாவது, குற்றப் புலனாய்வுப்பிரிவினர் எனத் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட பெண்ணொருவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம சேவையாளர்களுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு காணாமல் போனவர்களின் உறவினர்கள் குறித்து தகவல் பெற்றுள்ளார்.

அதன்பின்னர் குறித்த உறவினர்களுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு காணாமல் போன உறவினர்களை கண்டுபிடித்துதருவதாக கூறி அவர்களிடம் கப்பம் சேகரித்து வந்துள்ளார்.

இது தொடர்பில் தகவல் அறிந்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் சந்தேக நபரான பெண்ணை கைது செய்ததுடன் அவரிடம் இருந்து கையடக்கத் தொலைபேசி, 4 சிம் காட்டுக்கள், பணம் வைப்பில் இட்டதாகக் கருதப்படும் நபர்களின் கணக்கு இலக்கம், பண வைப்புச் சீட்டு, தங்க நகை அடகுச் சீட்டு என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவினர் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மாணவர் கௌரவிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் சாதனை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி ஸ்ரீதரன் பாலராணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வி.சுகுமாரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (எ-3,24)


'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர்
(7239)

யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
பாராட்டி வாழ்த்துகின்றோம்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை2011இல் சித்தியடைந்த மாணவர்கள்


அ.சிவதீபன் 180புள்ளி


ம.அமுதவிழி 179புள்ளி


ஜெ.வலன்ரினா 174புள்ளி


மோ.திவ்வியகரன் 173புள்ளி


ந.விஜான்சிகா 160புள்ளி


ஜெ. தரணிதரன் 159புள்ளி


கோ.ஆதவன் 156புள்ளி


தே. சுமிர்தன் 151புள்ளி

இம் மாணவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு, 100க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 48 மாணவர்களையும் வாழ்த்துகின்றோம். இவர்களைப் பயிற்றுவித்து வெற்றி பெறச் செய்த அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்

யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் — பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

வர்த்தகப் பிரிவு
2012 A/L
கணக்கீடு - D.SAM
வணிகக்கல்வி - B.S.பசில்
பொருளியல் - S.S. சிறி
ACA சுன்னாகம்
(5588)

சிங்கள வகுப்புகள்
பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
ஆரம்பம் 21.01.2012, சனிக்கிழமை
பிரிவு-i, 2-3. பிரிவு-ii, 3-4. பிரிவு-iii, 4-5.
ஒரு பிரிவில் 9 மாணவர்களே அனுமதிக்கப்படுவர், இன்றே பதிவுகளுக்கு முந்துங்கள். (Duration : 4 Months)
NORTH LEAD EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
Learn French the French Way
யாழ்ப்பாணத்தில் French Embassyஆல் அங்கிகரிக்கப்பட்ட ஒரே ஒரு மொழி பயிலும் மையமான Alliance Française de Jaffnaஇன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.
வகுப்புகள் : சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம். (7321)

ஓம் சக்தி



நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோவில்
அதி சுந்தர நவதள, நவகலச மஹா இராஜகோபுர சகித
புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தமோத்தம த்ரயத்திரும்சத்
(33) குண்ட மஹாயாக பிரதிஷ்டா
மகா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா
(தை மாதம் 15 ஆம் நாள் (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை 09.01-10.44)
கிரியாரம்பம்: தை மாதம் 5 ஆம் நாள் (19.01.2012) வியாழக்கிழமை காலை 9.21 நிமிடத்துக்கு மேல் கிரியாரம்பம்
யாகாரம்பம்: தைமாதம் 9 ஆம் நாள் (23.01.2012) திங்கட்கிழமை இரவு மஹாயாகாரம்பம்
எண்ணெய்க்காப்பு: 25.01.2012 புதன்கிழமை காலை 8 மணி முதல் 27.01.2012 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிவரை
மஹா கும்பாபிஷேகம் தை மாதம் 15ஆம் நாள் (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி 01 நிமிடம் முதல் 10 மணி 44 நிமிடத்திற்குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெற எம் பிராட்டி திருவருள் பாலித்துள்ளாள்.
பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார் ஸாகித்ய சிரோன்மணி,வித்யா கல்பநிதி
சிவஸ்ரீ.வை.மு.ப முத்துகுமாரசாமி சிவாச்சார்யார், ஆதீன பிரதம சிவாச்சார்யார்
குறிப்பு: அடியார்களின் நலன் கருதி நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரால் 20.01.2012 தொடக்கம் 07.02.2012 (தைப்பூசம்) வரை சிறப்பான முறையில் அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாகசாந்தி நிலையத்தினரால் குடிநீர் சேவை, தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினரால் மோட்டார் படகுச் சேவை, தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர், இலங்கை போக்குவரத்துச் சங்கத்தினர் பேருந்து சேவையினையும் வழங்கவுள்ளனர். நயினாதீவு பாடசாலையின் சாரணர் அமைப்பினால் சாரணர் சேவையும் வழங்கவுள்ளனர். மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து வரும் முதல் நிகழ்வான தைப்பூச நிகழ்வு வழமை போன்று வெகு சிறப்பான முறையில் இடம்பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.
தொ.பே:- 021 321 3024
021 320 7785
அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
(சி-5589)

## இன்று ஒரு தகவல்

# கொட்டாவி

நீங்கள் சிரித்தால் இந்த உலகமும் சிரிக்கும். இதேமாதிரி இன்னொன்று சொல்லலாம்.

"நீங்கள் கொட்டாவி விட்டால் இந்த உலகமும் கொட் டாவி விடும்" இது உண்மைதான் போன்றுள்ளது.

ஒருவர் கொட்டாவி விடுவதற்கு வாயைத் திறப்பதைப் பார்த்தால் , உடனே நமக்கு ஒரு உந்துதல் வந்து விடும்.

"இந்தக் கொட்டாவியை பற்றி நினைத்தாலே கொட்டாவி வந்து விடும்" என்று ஒரு ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்.

அவர் பெயர் டாக்டர் புரோவின். அவர் தனது ஆராய்ச்சி என்பதற்கு எடுத்துக் கொண்ட விடயம் கொட்டாவியாகும்.

கொட்டாவி தொடர்பாக ஒரு கூட்டத்திலே பலரிடம் ஒரு விடயத்தை கொடுத்து படிக்கச் சொல்லியிருக்கின்றார்.

அப்படி அதைப் படித்துக் கொண்டிருக்கும் போதே 75 சதவீத மானவர் அதிலேயே கொட்டாவி விட்டு விட்டார்கள்.

ஏனையவர்கள் கொட்டாவி விடவில்லை.

இதுவொரு விநோதமான செய்கையாகத்தான் இருக்கிறது. இது பற்றிய முழு விபரத்தையும் இன்னமும் நம்மால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஏனென்றால், இது பற்றிய ஆராய்ச்சி மிகவும் குறைவுதான்.

எத்தனையோ முக்கியமான விடயங்கள் இருக்கும் போது இதைப் பற்றி யார் அக்கறையாக ஆராய்ச்சி செய்வார்கள். இருந்தாலும் ஒரு சிலர் அதிலே மிகவும் மும்முரமாக இருக் கிறார்கள்.

பொதுவாக கொட்டாவியைப்பற்றி இதுவரைக்கும் எல் லோரும் நம்பிக்கொண்டிருப்பது என்ன தெரியுமா?

இரத்தத்திலே ஒட்சிசனை அதிகப்படுத்துவதற்கோ அல்லது இரத்தத்திலேயிருந்து அதிகபடியான காபனீரொட்சைட்டை வெளியேற்றுவதற்காகவே உண்டான ஒரு சுவாசப் பயிற்சி தான் கொட்டாவி. இப்படியாகத்தான் எல்லோரும் நினைத்துக் கொள்கிறார்கள்.

ஆனால், டாக்டர் புரோவின் இன்னொரு தடவை இதைப்பற்றி சில சோதனையெல்லாம் செய்து பார்த்துள்ளார்.

சுத்தமான ஒட்சிசனை சிலபேர் சுவாசிக்கிற மாதிரி செய்து பார்த்திருக்கிறார். அவர்கள் எல்லோரும் அதிகமாக கொட்டாவி விடுகிறார்கள் என்பது தெரியவந்தது.

அப்படியென்றால் ஒட்சிசன் தேவைக்காக அவர்கள் கொட் டாவி விடுகிறார்கள் என்று நினைப்பது பிழை தான்.

ஒருமனிதன் பிறந்து 5 நிமிடங்களிலேயே கொட்டாவி விடுவதற்கு ஆரம்பித்து விடுகிறான். அது மட்டுமா? மிருகம், பறவை, மீன், போன்ற உயிர்களும் கொட்டாவி விடுகின்றன.

மனிதன் விடுகிற கொட்டாவியும்- மிருகங்கள் விடும் கொட்டாவியும் ஒன்றா? இதுவொரு முக்கியமான கேள்வி.

தூண்டுதல் உணர்வு ( Stimulation)குறைவாக இருக்கும் போது மனிதன் கொட்டாவி விடுகிறான்.

முக்கியமான ஒன்று இடம் பெறப்போகிறது என்ற எதிர்பார்ப் பிலே மிருகங்கள் கொட்டாவி விடுகின்றன.

மிருகங்களைப் பொறுத்த வரைக்கும் இது உறுதியாகத் தெரிகிறது. எப்படியென்றால்... அவைகள் எல்லாம் கொட்டாவி விடும்போது இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் இவை இரண்டும் அதிகமாகிறது. இது அந்த மிருகத்தை செயற்படத் தயார் நிலைக்கு கொண்டு வந்து விடுகிறது.

ஒரு மனிதன் எப்படியென்றால்... சாவகமாசமான சூழ் நிலையிலேயே கொட்டாவி விடுகிறான். ஆகையினாலே கொட் டாவி பற்றி இதுதான் உண்மை என்று ஒரு விளக்கத்தைக் கொடுக்க முடியவில்லை. ஏனென்றால்,அது எந்த நேரத்தில் வரும் என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பேருந்து சேவையை சீராக நடத்தக்கோரி முல்லை.அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(மல்லாவி)

மாங்குளத்தில் இருந்து மல்லாவி, துணுக்காய், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் ஆகிய இடங்களுக்கு காலை 8.30 மணிக்கு முன்னர் பேருந்து சேவையை ஏற்படுத்தி தருமாறு பொதுமக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கை அடங்கிய மகஜரினை முல்லை.மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், முல்லை.மாவட்ட இலங்கை போக்குவரத்துச்சபை, பேருந்துச்சாலை முகாமையாளர் மற்றும் முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோரிடம் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் வருமாறு,

மாங்குளத்தில் இருந்து மல்லாவி, துணுக்காய், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் ஆகிய இடங்களுக்கு காலை 8.30 மணிக்கு பேருந்து சேவை இல்லாமையால் அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், நோயாளர்கள், சந்தைக்கு பொருட்களை விற்பனைக்காக கொண்டு செல்லும் விவசாயிகள் எனப்பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்தும் வவுனியாவில் இருந்தும் மேற்படி இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கும் மற்றும் அரச திணைக்களங்களுக்கும் தினசரி வருகின்றனர். காலை 6 மணியில் இருந்து பேருந்துக்காக காத்திருந்து 8.30 மணிக்குப் பின்னரே பயணிக்க வேண்டியுள்ளதால் உரிய இடங்களை இப்பேருந்து சென்றடைய 10.30 மணிக்கு மேலாகின்றது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றது. அரச உத்தியோகத்தர்களும் திணைக்களங்களுக்கு நேரம் தாமதித்தே செல்ல வேண்டியுள்ளது.

முல்லை.மாவட்ட தனியார் பேருந்து சேவை சங்கத்தால் மல்லாவியில் இருந்து மாலை புறப்பட்டு மாங்குளத்தில் தரித்து நின்று பின்னர் அடுத்த நாள் காலை 7.30 மணிக்கு பேருந்துச்சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.எனவே, இச் சேவையை மீண்டும் ஆரம்பித்து உடன் சீர் செய்து தருமாறு அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3-15)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறை நிலவுகின்றது

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தாதியர் .பற்றாக் குறை நிலவுகின்றமையால் இவற்றை சீர்செய்வதற்கு அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே இவ்வைத்தியசாலையில் இயங்கும் நான்கு நோயாளர் தங்கு விடுதிகளுடன் வெளிநோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றில் ஒப்பந்த அடிப்டையில் மூன்று தாதிய உத்தியோகத்தர்கள் கடமையாற்றி இருந்தனர். இவர்களும் கடந்த டிசெம்பர் முதாலாம் திகதி தொடக்கம் ஓய்வு பெற்று சென்று விட்டனர். இவ்வெற்றிடம் உட்பட 18 தாதியர் சேவைக்கு தேவைப் பட்டிருந்தனர். தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நான்கு நோயாளர் விடுதிகளும் விரைவில் திறக்கவுள்ள நிலையில் மேலும் 12 தாதியர் தேவையென கணக்கிடப்பட்டுள்ளது. அத்துடன் புதிய விடுதியில் பொருத்தப்படவுள்ள அதிதீவிர சிகிச்சை பிரிவு உபகரணங்களை கையாளக் கூடிய பயிற்சி பெற்ற தாதிய உத்தியோகத்தர்களும் தேவைப்படுகின்றனர்.

எனவே, இவ்வைத்தியசாலையில் பற்றாக்குறையாகவுள்ள தாதியர் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 65 | 60-100 | 70 |
| பச்சைமிளகாய் | 130 | 160 | 190 |
| தக்காளி | 80-90 | 50 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 25 | 30 |
| கோவா | 80 | 60 | 60 |
| கரட் | 80 | 120 | 100 |
| பூசணி | 50 | 40 | 60 |
| புடோல் | 55 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 35 |
| சின்ன வெங்காயம் | 70 | 50 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 90 |
| பாகற்காய் | 120 | 140 | 150 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 150 | 200 | 150 |
| லீக்ஸ் | -- | 100 | 80 |
| பீற்றூட் | -- | 120 | 100 |
| கறிமிளகாய் | -- | 160 | 250 |
| முருங்கைக்காய் | -- | 400 | -- |
| போஞ்சி | 90 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 100 | 70 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 25 | 25 |

## இராசி பலன்

*19.01.2012*

*(தை 05,வியாழக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு*
*ஏகாதசி முன்னிரவு 7.18 மணிவரை*
*அனுசம் முன்னிரவு 8.34 மணிவரை*
*இராகுகாலம்-2.05-3.35 மணிவரை*
*சுபநேரம்-8.05-9.35 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்** வேலைச்சுமை கூடும், எதிர்பாராத விதத்தில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் தாமதமாகும், உடல் நலக்குறைவுண்டு, அதிகாரிகளை அனுசரித்து செய்வது நல்லது.

**இடபம்** சுற்றத்தார் வரவால் குதூகலம் ஏற்படும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் தோன்றும், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்,சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**மிதுனம்** தொழில் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபடுவீர்கள்,ஆரோக்கியமான நாள், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் நாள், வியாபாரம், தொழில் புரிய திட்டங்களை தீட்டுவீர்கள், விருந்தினர் வருகையால் வியப்படையும் நாள்.

**சிங்கம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், சேமிப்பை அதிகரிக்க வழிவகை செய்வீர்கள், ஆழ்ந்த சிந்தனைகள் ஏற்படலாம்,வாகன சுகமுண்டு,தொழில் நன்மையுண்டு.

**கன்னி** உடன்பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,எடுத்த காரியத்தை உற்சாகத்துடன் செய்து முடிப்பீர்கள், சுப முயற்சியில் ஆதாயம் பெறுவீர்கள்.

**துலாம்** எதிர்பாராத தன வரவுகள் இல்லம் தேடி வரலாம்,வாக்கு மேன்மையுண்டு, புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையடைவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள்,பொருளாதார நிலை உயர்வடையும்,பயணங்கள் மூலம் புதிய நட்புகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு,உறவினர் வருகையுண்டு.

**தனுசு** உங்கள் புதிய சிந்தனைக்கு ஆதரவு கிடைக்கும், தாராளமாகச் செலவுகள் செய்து மகிழ்வீர்கள், இடமாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மகரம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் வருமானம் அதிகரிக்கும்,உறவினர் வருகையால் உதவிகள் கிடைக்கலாம், கலகலப்பான நாள்.

**கும்பம்** மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம்,கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், தொழில் ரீதியான பயணங்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு, தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, பகைவர்கள் விலகுவர்.

வளவன்



யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் கால்கோள்விழா நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி செல்வராணி சகாதேவன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன் உரையாற்றுவதையும் மாணவர்களின் நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதி மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளின்)

# பரீட்சைகள் தொடர்பிலான முடிவுகளின் போது ஆசிரியர் சங்கங்களின் ஆலோசனை பெறப்பட வேண்டும்

## யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

பல நாடுகளில் அரசியல்வாதிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் ஒரு உறவுப்பாலம் உள்ளது. அங்கு ஆசிரியர்களின் சிந்தனைகளையே அரசியல்வாதிகள் செயற்படுத்தி வருகின்றனர்.

ஆனால் இவ்வாறான நிலைமை எமது நாட்டில் பின் தங்கியே காணப்படுகின்றது என யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்துகின்றது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அடையாள வேலை நிறுத்த போராட்டத்தின் போதே இச்சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அச்சங்கம் மேலும் தெரிவிக்கையில்,

கல்வியமைச்சு மாணவர்கள் மற்றும் பரீட்சை தொடர்பான முடிவுகளை தன்னிச்சையாகவே எடுத்து வருகின்றது. இச்செயல் நாட்டின் கல்விக்கு ஆரோக்கியமாக அமையாது.

பரீட்சை தொடர்பான முடிபுகள் எடுக்கும் போது அனைத்து ஆசிரியர் சங்கங்களின் ஆலோசனைகள் பெறப்பட்ட பின்பே எடுக்கப்படல் வேண்டும்.

ஆனால் எமது நாட்டில் பரீட்சை தொடர்பான முடிபுகளை அரசியல்வாதிகளே தீர்மானிக்கின்றனர்.

இந்நிலைமையினால் தான் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிபுகளிலும் குளறுபடிகள் காணப்படுகின்றன.

இசட்புள்ளிகளில் தன்னிச்சையான முடிபுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் பல்கலைக்கழக தெரிவிற்குரிய புள்ளிகளை பெற்றிருந்தும் இசட்புள்ளிகளின் குளறுபடிகளினால் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகாமல் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

பரீட்சை முடிபுகளில் பிழை உண்டு என கல்வியமைச்சுக்கு சகல ஆசிரியர் சங்கமும் தெரிவித்த போதும் அதனை அரசு செவிமடுக்க மறுத்துவிட்டது.

அதனைவிட யுத்தத்தினை காரணம் காட்டி கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட்டது.

ஆனால் இன்று யுத்தம் முடிவுற்றுள்ள போதும் 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் 1.9 வீதமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையின் இலவசக்கல்வியினை இல்லாமல் செய்வதற்குரிய ஏற்பாடுகளாகும்.

பணமுள்ளவர்கள் மட்டும் கற்கும் நிலையினை தனியார் பல்கலைக்கழகங்களினூடாக ஏற்படுத்த அரசு முனைகின்ற சந்தர்ப்பத்தில் ஏனைய நாடுகளில் இத்தகைய தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளன என அரசினால் சாட்டுக் கூறப்படுகின்ற போதும் இலங்கையில் இலவசக்கல்வியினை விட்டு விலகப் போவதற்கான சூழ்நிலை இன்னும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

தமது அன்றாட வாழ்க்கைச் செலவிற்கே அல்லற்படும் மக்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் அதிகளவான பணத்தினை செலுத்தி கல்வி கற்க முடியாது.

மேலும் எமது பல்கலைக்கழகத்திற்கென கொள்கைகள் காணப்படல் வேண்டும். எமது பல்கலைக் கழகத்தினை சர்வதேசதரத்திற்கு தரமுயர்த்துவதற்கு ஆசிரியர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் எனச்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-4)

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

ஐந்து நபர்களை அடித்து காயப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்கு மாணவர்கள் நேற்று முன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா குறித்த நான்கு பாடசாலை மாணவர்களும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாக கண்டு தலா ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

இந்த சம்பவம் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்றதோடு வழக்கு தொடங்கிய நாட்களில் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் இரு ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததோடு இம்மாணவர்களை ஆற்றுப்படுத்து பாடசாலையிலும் சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு உயர் தேசிய சுற்றுலாத்துறை டிப்ளோமா கற்கை நெறியினை கற்பிப்பதற்கு வருகை விரிவுரையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியானவர்கள் தங்களின் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், இல.65/2 , கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்குமாறு பணிப்பாளர் எஸ். விஜயநாதன் அறிவித்துள்ளார். (அ-2)

## திருமந்திரம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் மாதம் ஒரு கோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதல் நிகழ்வுகள் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் பெப்ரவரிமாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையும் கோண்டாவில் கிழக்கு அருள்மிகு சிவஞான பழனி முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது என அகில இலங்கை திருமுறைமன்றம் அறிவித்துள்ளது.

இதில் பத்தாந்திருமுறை திருமந்திரம் முற்றோதல் தினமும் மாலைப்பூசையுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)




## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சிப் பாடசாலை அதிபர் தொழில் வழிப்படுத்துநர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல உள்ளகப்பயிற்சி ஆசிரிய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி திரு.எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (அ)

## க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யா/தேவரையாளி இந்துக் கல்லூரி

கலைப்பிரிவு

வே.அபிசா -3ஏ, சீ.சுதர்சன்-2ஏபி, யோ.அபிநயா-2ஏபி, சி.கனீபா-2ஏபி, த.வைஷ்ணவி-ஏ2பி, இ.நிஸ்வினா-ஏ2பி, த.அசோக்- ஏபிசி, ம.கீர்த்தனா-ஏ2சி, சி.குருநீலன்-3பி, இ.சுமித்தா- 2பிசி, பா.சந்திரிகா-2பிசி. (அ)

## அன்புவார ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு நடத்தும் அன்புவார ஒன்றுகூடல் யாழ்ப்பாணம் திருநெல்வேலி, இராமநாதன் வீதி, ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் ஆசியுரையினை வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுத் தலைவர் டாக்டர் ஆர்.கணேசமூர்த்தியும், சிறப்புரையினை வடமாகாண கல்வித்திணைக்களச் செயலாளர் சி.சத்தியசீலனும், வடமாகாண ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் ஜெயாதம்பையாவும் ஆற்றவுள்ளனர்.

அத்துடன் யாழ். மத்திய சத்திய சாயி நிலைய இளைஞர்களின் இராம இராட்சியம் நடன நிகழ்வும், மனித மேம்பாட்டு பாடல்களும் இடம் பெறவுள்ளன. அத்தோடு முதற்பரிசு பெறும் மாணவர் ஆக்கங்கள் சமர்ப்பித்தலும், பரிசு வழங்குதலும் இடம்பெறும். (அ)

## விசேட பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சங்கத் தலைவர் த. சிதம்பரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விசேட விருந்தினராக யு.என்.டி.பி. பிரதிநிதி எஸ். ஞானகணேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி கால்நடை வைத்திய அதிகாரி க.இரகுநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவிருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. செல்வகுமாரன், யாழ். மாவட்ட கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-29)

## கால்கோள்விழா

(யாழ்ப்பாணம்)

மயிலணி, வரியப்புலம் வீதியிலுள்ள ஜனசக்தி முன்பள்ளி மாணவர்களிற்கான கால்கோள்விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன்பள்ளி ஆசிரியர் திருமதி ஜெ.வடிவாம்பிகை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சிறப்புவிருந்தினராக லெனின் முன்பள்ளி ஆசிரியர் திருமதி ரா.மோகனா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-2)

# உங்கள் வாழ்க்கைக்கான வசந்த காலம்...



## ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸின் புதிய கிளைகள், முல்லைத்தீவு மற்றும் சாவகச்சேரியில்

இயற்கையென்பது வாழ்க்கைக்கான ஓர் கொடை. ஆயினும் வாழ்க்கையென்பது அற்புதங்கள் மிக்க உன்னத கொடை. உங்களது அந்த அற்புதமான வாழ்க்கைக்கு உங்களுக்கே உரிய இயற்கை வளத்துடன் சேர்ந்து நாமும் அக்கறையுடன் எமது பாதுகாப்பின் கூரைகளில் உங்களை அரவணைத்துக் கொள்ள, இதோ 2012 **ஜனவரி 19ஆம் திகதியாகிய** இன்று முதல், முல்லைத்தீவு மற்றும் சாவகச்சேரியில் எமது புதிய கிளைகளை திறக்கின்றோம்.

அரைநூற்றாண்டுகாலமாக காப்புறுதிச் சேவையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதில் பெருமிதம் கொள்ளும் ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸாகிய எமது சாவகச்சேரி **கிளையானது ஏ9 வீதி, சாவகச்சேரியில் மு.ப. 9.15 மணிக்கும், முல்லைத்தீவு கிளை, பிரதான வீதி, முல்லைத்தீவில் பி.ப. 3.30 மணிக்கும்** வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படும். இப் பிரதேச வாழ் மக்கள் அனைவரையும் இத் திறப்பு விழாக்களில் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸின் முகாமைத்துவத்தினரும், ஊழியர்களும் அன்புடன் வரவேற்கின்றார்கள்.

AAA RAM RATINGS

AA (lka) FitchRatings

SGS UKAS

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

# ஜனாதிபதியின் அரசியல் கவசங்களாக பசிலும் கோத்தபாயவும் உள்ளனர்

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

**பசில் ராஜபக்ஷ மற்றும் கோத் தபாய ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் அரசியல் கவசங்களாக செயற்பட்டு வருவதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.அதாவது, பிரபல்யமற்ற தீர்மா னங்களின் பொறுப்பை பசிலும் கோத்தபாயவும் ஏற்றுக் கொண்டு ஜனாதிபதியின் நன்மதிப்பை பாதுகாத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பிலிருந்து முற்று முழுதாக விலகிக் கொள்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

2007 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி இலங்கைக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளக்கினால் இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பல முக்கியமான விடயங்களில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்க தயக்கம் காட்டுவதாகவும் காலம் தாழ்த்துவதாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி இவ்வாறு பொறுப்புக்களை பசில் ராஜ பக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரிடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிப் பேரவை நடவடிக்கைகளை காலம் தாழ்த்தியமை மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைத்திட்டத்தை முன்வைக்காமை போன்றவற்றை இதற்கு உதாரணமாக காட்ட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையிலான உறவு குடும்ப ரீதியானது மட்டுமன்றி அரசியல் ரீதியானதும் கூட என அவர் தமது குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜ பக்ஷ சகோதரர்கள் அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பாதுகாப்பு கொள்கைகளை வகுப்பதில் மிக முக்கிய பங்கு வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஜனாதிபதி அரசியல் கவசமாக அவரது இரண்டு சகோதரர்களும் திகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மிக வலுவான அதிகாரம் காணப்பட்டபோதிலும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அந்த அதிகாரத்தை பயன்படுத்தவில்லை என பிளேக் தெரிவித்துள்ளார்.

(அ-2)

## சரணாலயத்தில் பெரும் தீ விபத்து

நுவரெலியா, அக்கரபத்தனை போபத்தெல சரணாலயத்தில் தீப் பற்றியுள்ளது. நேற்று காலை ஏழு மணியளவில் சரணாலயத்தில் தீப் பற்றியுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஏரந்தன ஹேமவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

வனப்பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகதர்களும் பொலிஸாரும் கூட்டாக தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளனர். தேவை ஏற்படும் பட்சத்தில் விமானப்படையினரின் உதவியை நாடு வதற்கும் நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஏரந்தன் ஹேமவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# ஐ.தே.க. தலைவர்களுக்கான தேர்தல் பக்கச்சார்பின்றி நடைபெற்றுள்ளது

## செயற்குழு நம்பிக்கை வெளியிட்டதாக திஸ்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தல் பக்கச்சார்பின்றியும் ஒழுக்கமுடனும் இடம்பெற்றதாக நேற்று முன்தினம் கூடிய செயற்குழு தன்னிடம் நம்பிக்கை வெளியிட்டதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கின்றார்.

இதுதவிர 12 விடயங்கள் தொடர்பிலான தீர்மானங்களுக்கு செயற்குழு அனுமதி வழங்கியதாகவும் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானங்களின் பிரகாரம் கட்சியின் நல்லிணக்கம் மற்றும் செயற்பாடுகள் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்பதுடன் எந்தவொரு கட்சியினுள் கருத்து முரண்பாடுகள் ஏற்படும் வகையில் கட்சி தலைமைத்துவம் மற்றும் அதிகாரிகளை விமர்சிக்கக் கூடாது.

பல்வேறு செயற்பாடுகளுக்காக நியமிக்கப்படுகின்ற குழுக்களின் உறுப்பினர்கள் அந்தந்த குழுக்களின் விடயங்கள் மற்றும் அவற்றின் நோக்கங்கள் என்ற வரையறைக்குள் செயற்பட வேண்டும் என்றும் அந்த தீர்மானங்களில் கூறப்பட்டுள்ளது.

கட்சி ஆதரவாளர்களை வெவ்வேறு குழுக்களாக சந்திக்க முடியாது என்பதுடன் தனிநபராகவோ அல்லது குழுவாகவோ அடையாளப்படுத்திக் கொள்ள முடியாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவரின் அல்லது செயற்குழுவின் அனுமதியின்றி குழுவாகவோ அல்லது ஒரு சிலர் இணைந்தோ செயற்பட முடியாதென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்களுக்கமைய கூட்டங்களுக்காக அங்கத்தவர்களையோ அல்லது குழுக்களையோ அழைக்கும் செயற்பாடுகள் அதற்கென நியமிக்கப்படும் நபரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாராளுமன்ற குழுக்கூட்டம், செயற்குழுக்கூட்டம், மாகாண சபைக்குழு கூட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்றக்குழுக் கூட்டம் ஆகியன குறிப்பிட்ட தினத்திலான நிகழ்ச்சி நிரலின்படி மாத்திரமே அமைய வேண்டும் என செயற்குழு தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கட்சி பொதுச் செயலாளரின் பூரண அனுமதியின்றி கட்சியுடனான எந்தவொருகடிதப் பரிமாற்றங்கள் தொடர்பாகவும் ஊடகங்களுக்கு தகவல் வெளியிட முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழுவினால் நேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-2)

# துமிந்த பாதிக்கப்பட்ட நபரன்றி சந்தேக நபராக கருதமுடியாது

## அவரது சட்டத்தரணி வாதம்

முல்லேரியா சம்பவத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வா பாதிக்கப்பட்டவரே தவிர சந்தேக நபர் இல்லை என கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ண குல சூரிய மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

துப்பாக்கி பிரயோக சம் பவம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பவத்தின்போது முதலாவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வாவிற்கே துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் சாரதி உள்ளிட்ட சாட்சிகள் 5 பேருக்கும் மேலதிகமானவர்கள் வாக்குமூலம் அளித்துள்ள நிலையிலும் அவர் சந்தேக நபராக்கப்பட்டுள்ளார் என சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

பௌதீக ரீதியான சாட்சிகள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியிலிருந்து இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வர்ணகுல சூரிய மேலும் தெரிவித்தார்.

இதன்போது உதாரணம் ஒன்றை முன்வைத்த சட்டத்தரணி முன்னாள் அமைச்சர் லலித் அத்துலக் முதலி படுகொலை சம்பவம் தொடர்பாக விளக்கமளித்தார்.

கொலையை மேற்கொண்டவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் என உறுதிப்படுத்தப்பட்ட போதும் அது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியை குற்றம் சுமத்துவதற்கு சிலர் சாட்சிகளை பயன்படுத்தியதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

(அ-2)

# சிரேஷ்ட பிரஜைகளின் தொகை 16 இலட்சத்து 61 ஆயிரம் வரை

## அமைச்சர் பீலிக்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் 16 இலட்சத்து 61 ஆயிரம் பேர் வாழ்வதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களுக்குள் நோய், இரத்த வகை அடங்கலான சகல தரவுகள் உள்ளடங்கிய சிப் உடன் கூடிய அடையாள அட்டையொன்றை சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்க திட்டமிட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வாய்மூல விடைக்காக சஜித் பிரேமதாச எம்.பி.எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியுள்ளதாவது,


சிரேஷ்ட பிரஜைகள் தொடர்பில் 2003/4 ஆம் ஆண்டிலே தொகை மதிப்பீடு செய்யப்பட்டது.

புள்ளி விபரவியல் திணைக்கள தரவுகளின் படி 60 தொடக்கம் 70 வயது வரையானவர்கள் 9 இலட்சத்து 36 ஆயிரத்து 804 பேரும் 70 தொடக்கம் 80 வயது வரையானவர்கள் 5 இலட்சத்து 36 ஆயிரத்து 503 பேரும் 80 தொடக்கம் 90 வயதானவர்கள் ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 100 பேரும் 90 வயதுக்கு மேற்பட்டவர்கள் 21 ஆயிரத்து 593 பேரும் உள்ளனர்.

சிரேஷ்ட பிரஜைகளில் 8 இலட்சத்து 52 ஆயிரத்து 253 பேருக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மேலும் பல நிவாரணங்கள், உதவிகள் வழங்க உள்ளோம்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அடுத்த வாரம் வெளியிட முடியும் என்றார்.

(அ-2)



எம்.ஜி.ஆரின் 95 ஆவது பிறந்த தினமான நேற்று முன்தினம் குருநகரில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு குருநகர் அண்ணா எம். ஜி. ஆர். மன்ற தலைவர் செ. அன்ரன் மலர் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதி 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து பேசுவார் என மகிழ்ச்சி கொள்ள முடியாது

## மனோ கணேசன் காட்டம்



(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்திற்கு போர் நடத்த உதவி செய்த இந்தியா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நான்கு முக்கிய நாடுகளிலும் அதிகாரப் பரவலாக்கல் இருக்கின்றது. இந்நாடுகளில் மத்திய அரசாங்கத்துடன் மாநில அரசாங்கங்களும் சுயாட்சி பிரதேச அரசாங்கங்களும் இருக்கின்றன.**

**மாநில பொலிஸாரும் மத்திய பொலிஸாரும் இருக்கின்றன. பல மொழிகள், பல இனங்கள் வாழ்கின்ற நாடுகள்தான் இந்தியா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகியவை. இந்த உண்மைகள் தெரியாதவர்கள் முட்டாள்கள்.**

தெரிந்தும் உடன்பட மறுப்பவர்கள் பேரினவாதிகள். ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் பேரினவாத முட்டாள்கள். பௌத்த மதத்தின் பெயரில் அரசியல் நடத்தும் இவர்களின் முகமூடியை வரலாறு விரைவில் கழற்றி எறியும் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் அதிகாரப் பரவலாக்கல் எதிர்ப்பு நிலைப்பாடு தொடர்பிலே கருத்து தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

உலகம் முழுவதும் இன்று அதிகாரப் பரவலாக்கலை நோக்கிப் போய்க்கொண்டு இருக்கின்றது. சம்பிக்க ரணவக்கவும் அவரது அணியினரும் இன்று வரலாற்றை பின்னால் கொண்டு செல்லும் வேலையை செய்கின்றார்கள். முழு நாட்டையும் ஒரே இனத்திற்கு மாத்திரம் சொந்தம் கொண்டாட இவர்கள் திட்டம் போட்டு வேலை செய்கின்றார்கள். தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்வதனால் இரண்டாம் மட்ட பிரஜைகளாக வாழலாம் என்பது தான் இந்த பௌத்த கட்சியின் நிலைப்பாடு.

13 ஆம் திருத்தத்தை கடக்கும் தீர்விற்கு உடன்படுவதாக ஜனாதிபதி இந்திய அரசிடம் உறுதி அளித்துள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது. இதை கேட்டு நாம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய முடியாது. பட்டாசு கொளுத்த முடியாது. இத்தகைய எத்தனையோ வாக்குறுதிகளை நாம் கேட்டுப் பழக்கப்பட்டவர்கள்.

கையெழுத்து போட்டுத் தந்துவிட்டு பின்னர் மத குருமார்களிடம் ஒப்பந்த ஆவணத்தை கிழித்து கொடுத்ததை நாம் பார்த்துள்ளோம். பாராளுமன்றில் தீர்வு பொதி ஆவணத்தை தீ வைத்து எரித்த காட்சியையும் நாம் பார்த்துள்ளோம்.

அரசாங்கம் ஒன்றை தருவது போல் காட்டிவிட்டு பின்னர் பின்வாங்குவதற்கு திட்டம் போடுகின்றதா என்ற சந்தேகம் தோன்றுகின்றது. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் எந்த ஒரு தீர்வுமே தரக் கூடாது என சத்தம் போடுகிறார்கள்.

இந்திய அரசின் கடமை வாக்குறுதி வாங்கி தருவது அல்ல. தீர்வை பெற்று அதை நடைமுறை ஆக்குவதே இந்தியா செய்ய வேண்டியது ஆகும்.

இது ஏதோ தமிழர்களுக்கு செய்யும் விசேட சலுகை என கருத முடியாது. இனி ஒருமுறை இந்திய அரசின் தலைவர் இலங்கை வந்து இதேமாதிரி வாக்குறுதி வாங்கி கொடுக்கும் நிலைமை ஏற்படக் கூடாது. (அ-2)

# பெற்றோர்கள் மாணவர்களின் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்

## ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் குறித்து மிகவும் அவதானம் செலுத்த வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இந்த வருட பாட நூல்களை கையளிக்கும் வைபவத்தில் அண்மையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களின் நடத்தையினை பெற்றோர் நன்கு அவதானிக்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மாணவர்களுடன் பெற்றோர் மற்றும் பர்துகாவலர்கள் செலவிடும் காலம் குறித்து உரிய கவனம் செலுத்த வேண்டும்.

சிறிய பராயத்தில் மாணவர்கள் மீது காட்டப்படும் அக்கறை, அவர்கள் வளர்ந்து வரும் போது குறைவடைந்து வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (அ)

# சீபா ஒப்பந்தம் குறித்து மார்ச் மாதம் பேச்சு

## இந்திய வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் கைச்சாத்திடப்படவுள்ள சீபா ஒப்பந்தம் குறித்து எதிர்வரும் மார்ச் மாதம் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரு நாடுகளினதும் வர்த்தக விவகார அமைச்சர்கள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு சீபா ஒப்பந்தம் குறித்து இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

உள்ளூர் வர்த்தகர்களின் எதிர்ப்பு காரணமாக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டிள்ளார்.

இதேவேளை, இந்தியாவுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இலங்கை உள்ளூர் உற்பத்தியாளர்களும் சிறு வர்த்தகர்களும் பாரியளவில் பாதிக்கப்படக்கூடுமென தெரிவித்துள்ளனர். எனினும் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பில்லை என இந்தியா அறி வித்துள்ளது. (அ-2)

# பொறுப்பதிகாரிகள் 30 பேருக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் 30 பேருக்கு இடமாற்றம் வழங்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரே இடத்தில் கடமையாற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கே இடமாற்றம் வழங்க தீர்மானித்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சுமார் 10 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நேற்றைய தினம் இடமாற்றம் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இதற்கு முன்னரும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் 17 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புலிகளுக்கு உயிரூட்ட அரசு முயற்சிக்கின்றது

## ம.போ.இ.ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

தமது குறைபாடுகளை மூடி மறைக்கும் நோக்கில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உயிரூட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக மக்கள் போராட்ட இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் வருணா ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் முற்று முழுதாக தோற்கடிக்கப்பட்டு விட்டதாக தெரிவித்து பாரிய பொருட்செலவில் இந்த அரசாங்கம் விழாக்களையும் கொண்டாட்டங்களையும் நடத்தியது.


அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் சந்தர்ப்பத்தில் மீண்டும் புலிகள் தொடர்பான அச்சத்தை வெளிப்படுத்தும் முயற்சி நகைப்புக்குரியது என வருணா ராஜபக்ஷ தெரிவித்தள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இனவாத அடிப்படையில் போராட்டத்தை நடத்தினார்கள். எனினும் நாம் சகல இனங்களையும் ஒன்றிணைத்து அனைவருக்காகவும் போராடுகின்றோம்.

நியாயமான போராட்டங்களில் ஈடுபட்டு வரும் தமது அமைப்பைச் சார்ந்தவர்களை அரசாங்கம் புலிகளுடன் தொடர்புபடுத்த முயற்சிக்கின்றது. ஆயுத போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அரசாங்கம் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்கள் எந்தவொரு அடிப்படையும் அற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர், அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பலர் இன்று காணாமல் போனோர் பட்டியலில் இணைந்து கொண்டுள்ளனர்.


இந்த நிலையில் இன்று அரசாங்கம் நாட்டு மக்களுக்கும் ஜனநாயகத்திற்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




கல்கிஸை பிரதேசத்தில் பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் ஒன்று பஸ் ஒன்றுடன் மோதி நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது. இதில் விபத்துக்குள்ளான வாகனத்தை படத்தில் காணலாம்.

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2012-12.02.2012




**மகம், பூரம், உத்தரம் 1-ஆம் பாதம் வரை**

### நினைத்ததை சாதிக்கும் நேரமிது

**எந்தப்பிரச்சனை இருந்தாலும் எதிர்கொண்டு நிற்கும் சிம்ம இராசி நேயர்களே!**

விரோதத்தைப் பற்றிக் கவலைப்படாமல், விரும்பியபடியே செயற்படுவீர்கள் நீங்கள் தான். ஒளிவு மறைவு இன்றி உன்னதமாகப் பேசுவீர்கள். நெளிவு, சுளிவுகளைக் கற்று வைத்துக் கொண்டு நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

புகழ்மிக்கவர்களின் பட்டியலில் முதலிடம் பெறும் முக்கியஸ்தர்களும் நீங்கள் தான். மாற்று இனத்தவர்களையும் ஏற்ற விதத்தில் அரவணைத்துக் கொள்வீர்கள். கூட்டு முயற்சி உங்களுக்கு பிடிக்காது.

உங்களுக்கு இந்த தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உன்னதமான மாதமாகவே கருதலாம். எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும் விதத்தில் எல்லா கிரகநிலைகளும் இருக்கின்றன. சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும்.

பொன்னும் பொருளும், இது வரை நடைபெற்ற ஏழரைச் சனியின் ஆதிக்கத்தால் இழந்தவற்றையெல்லாம், மீண்டும் பெறப் போகிறீர்கள். விலகிய சனி, இனி உலகில் நீங்கள் யார் என்பதை நீருபித்துக் காட்டப் போகிறது.

செவ்வாயின் வக்ர காலம் மட்டும் சில மனக்கசப்பான செய்திகள் வந்து சேரலாம். இருந்தாலும் செவ்வாய்க் கிழமை தோறும் முருகப் பெருமானை வழிபட்டு முன்னேற்றதிற்கு வித்திடும் திருக்கோவில்களுக்கும் சென்று வந்தால், வரும் துயரங்கள் வழியிலேயே திரும்பிச் செல்லலாம். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் குழப்பங்களிலிருந்து விடுபட நல்லவர்கள் யோசனை சொல்வர்.

சனியும் இம்மாதக் கடைசியில் வக்ரம் பெறுகிறார். 6,7-க்கு அதிபதியாக சனி விளங்குவதால் உடன் இருப்பவர்களால் பிரச்சினைகளும் போராட்டங்களும் தலை தூக்கினாலும் உங்கள் முகம் பார்த்துப் பேசும் பொழுது சரணடைந்து விடுவர். ஏழரைச்சனி விலகியதால் அதற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது நல்லது. அன்னதானத்தின் மூலமும் அதன் அருளைப் பெறலாம்.

உங்கள் இராசிக்கு 2,11-க்கு அதிபதியான புதன் ஜனவரி 18-ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, சிலரை நம்பிச் செய்த செயல்களில் ஏமாற்றங்கள் ஏற்படும். பணப் பொறுப்பு சொல்வதாக இருந்தால் பார்த்து யோசித்துச் சொல்வது நல்லது.

பெப்ரவரி 4-ஆம் திகதி கும்ப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, மாமன், மைத்துனர் வழியில் ஒரு மங்கல நிகழ்ச்சி நடைபெறலாம். சேமிப்பு உயர, புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீடு வாங்கும் முயற்சியிலும் வெற்றி கிட்டும்.

உங்கள் இராசிக்கு 3,10-க்கு அதிபதியான சுக்கிரன், பெப்ரவரி 4- ஆம் திகதி உச்சம் பெறுகிறார். இதன் விளைவாக தொழில் வளர்ச்சி மேலோங்கும், துரத்தி வந்த துயரங்கள் தூர விலகியோடும். நட்பால் நல்ல காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். எதிர்கால நலன் கருதி எடுக்கும் முயற்சிக்கு குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும்.

இம்மாதம் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதமாகவே அமையப்போகிறது. பக்கத்து வீட்டாரின் பகை மாறும் என்றாலும் உடன் இருப்பவர்களாலும் உடன் பிறப்புகளாலும் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பு உண்டு. கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உதாசீனப் படுத்தியவர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர். விற்ற சொத்துக்களுக்குப் பதிலாக புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். தாய்வழி ஆதரவு குறையலாம். தடைகள் அகல வழிபாடு செய்யுங்கள்.

# சிவல்புரி சிங்காரம்

**உத்தரம் 2, 3, 4 பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 பாதங்கள்**

### பணப்புழக்கம் அதிகரிக்கும் நேரம்!

**மற்வர்களை அனுசரித்துச் செல்வதில் மகா சமர்த்தர்கள் என்று பெயர் பெற்ற கன்னி இராசி நேயர்களே!**

நீங்கள் அமைதியாக இருந்து கொண்டே அரிய பணிபுரிபவர்கள், ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். எதை யார் செய்தாலும் அதை முடிவில் நீங்கள் மேற்பார்வையிட்டால்தான் திருப்தி அடைவீர்கள். பிறரைத் திட்டித்திட்டி வேலை வாங்குபவர்களுக்கு மத்தியில் தட்டிக்கொடுத்து வேலை வாங்குபவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சகல யோகமாகத் தொடங்குவதால் ஒரு தொகை செலவழித்து பிறகு அடுத்த தொகை வந்து சேரும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும் மாதமாகத்தான், இம்மாதம் அமைகிறது. பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப் போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள்.

இம்மாதம் செவ்வாய் வக்ரம் பெறுவது உங்க஌ுக்கு யோகம் தான். 3,8-க்கு அதிபதியான செவ்வாய் வக்ரம் பெறும்போது முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேர்வர். பழைய தொழிலில் இருந்து புதிய தொழில் தொடங்க, செய்த ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்பில் இருந்து, மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள்.

சனியும் வக்ர கதியில் இருப்பது ஒரு வகைக்கு யோகம்தான். 5,6 -க்கு அதிபதியாக சனி விளங்கினாலும் பிள்ளைகளின் சுப காரியத்தை நடத்தி வைக்கவும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு வாங்கிக் கொடுக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கவும் வழி காட்டுவார். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியைப் பார்க்கும் பொழுது கிரக மாலியா யோகத்தின் அடிப்படையில் கிரகங்கள் உலா வருகின்றன. சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாகவே இருக்கும் என்று சொல்லலாம்.

மகர இராசியில் ஜனவரி 18ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் 5-ல் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் இதுவரை இருந்த தடைகள் அகலும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாகன யோகம் உண்டு.




கும்ப இராசியில் பெப்ரவரி 4-ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். 6-ல் சஞ்சரிக்கும் புதன் ஆதரவு கொடுப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வைப்பார். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வி.ஆர்.எஸ் வாங்கிக் கொள்ளலாமா? என்ற எண்ணம் மேலேங்கும். வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். பிறருக்காக வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும்.

பெப்ரவரி 4-ம் திகதியன்றே மீன இராசியில் சுக்கிரன், உச்சம் பெறப் போகிறார். இதன் விளைவாகப் பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டு மழையில் நனையப் போகிறீர்கள். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதார நிலையைப் பெருக்கிக் கொடுக்க முன்வருவர். இம்மாதம் அனுமன் வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் அல்லல்கள் தீரும்.

இம்மாதம் குடும்ப ஒற்றுமை கூடும். கொடுக்கல், வாங்கல் ஒழுங்காகும். சனி விலகியதால் இனி சந்தோஷங்களையே சந்திப்பீர்கள். சென்ற மாத்தில் தாமதப்பட்ட சில காரியங்கள் துரிதமாக நடைபெறும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் மற்றும் பெற்றோரின் பிறந்த நாள் விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். சனீஸ்வர வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

(தொடரும்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 14



அச்சு நாடுகளின் கூட்டுத் தலைவர்கள் (அடால்ப் ஹிட்லர், பெனிட்டோ முசோலினி)

சோவியத் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்துடன் மற்ற மக்களினங்களின் பாசிச எதிர்ப்பு விடுதலைப் போராட்டம் ஒன்று கலந்தது.

"சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கியதானது, ஹிட்லர் படைகளைத் தோற்கடிப்பதற்காகக் கிளர்ந்தெழுந்த ஜனநாயக மக்களின் வெற்றிக்கான ஆதாரமாக விளங்கிய, தீர்மானகரமான அம்சங்களை இந்த யுத்தத்திற்கு அளித்தது. சோவியத்யூனியன் யுத்தத்தில் இறங்கியதானது, முதலாவதாக இதனுடைய மேலைய நேசநாடுகளின் துரோகத்தனமான மூனிக்


யதன் விளைவாக காரியத்தின் போக்கை நிர்ணயித்த குறிப்பிட்ட அரசியல் போர்த்தந்திரம் நடைமுறைப் படுத்தப்படலாயிற்று..." என்று அமெரிக்க கம்யூனிஷ்ட் கட்சியின் தலைவர் வில்லியம் ஃபோஸ்டர் எழுதினார்.

ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் உள்நாட்டுப் பிற்போக்கிற்கு எதிராக நடந்த ஆயுதம் தாங்கிய எழுச்சிகளில்- இந்த எழுச்சிகள் ஒரு சில ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் மக்கள் ஜனநாயக, சோஷலிசப் புரட்சிகளாக வளர்ச்சியடைந்தன-இரண்டாம் உலக யுத்தத்தின் நியாயமான, விடுதலைத் தன்மை நன்கு வெளிப்பட்டது.


ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியைப் பொறுத்தமட்டில் யுத்தத்தின் நியாயமான, விடுதலைத்தன்மை, ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் ஏகாதிபத்தி

போலந்து அரசை ஒழித்துக்கட்டி போலந்து மக்களை அடிமைப்படுத்துவதுதான் போலந்திற்கு எதிராகப் பாசிச ஜேர்மனி தொடுத்த யுத்தத்தின் நோக்கமாகும். போலந்தை முறியடிப்பதன் மூலம் தமது போர்த்தந்திர நிலைய்யை மேம்படுத்திக் கொள்ளவும் கூடுதல் இராணுவ- பொருளாதார மூல ஊற்றுக்களைப் பெற்று சோவியத்யூனியனை தாக்குவதற்கான தாக்குமுனையை ஏற்படுத்தவும் ஹிட்லர் துருப்புக்கள் முயன்றன.

டான்ட்ஸிங்கை (கிதான்ஸ்) தருமாறும் "போலந்து இடைவழியில்" சாலையையும் இருப்புப்பாதையையும் அமைக்கும் உரிமையை



ஸ்ராலின் ஸ்ராலின் கிரேட் போரில் பங்குகொண்ட சோவியத் டாங்கிப்படையின் டாங்கிகளில் ஒன்று



ஸ்ராலின்

சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் ஏப்ரல்3,1922-மார்ச்5,1953

பாசிச ஜேர்மனியின் தாக்குதலுக்குள்ளான போலந்து, யுக்கோஸ்லாவிய மக்கள் ஆரம்பம் முதலே தமது சுதந்திரம், தேசிய விடுதலைக்காக . நியாயமான் யுத்தத்தை நடத்தினர். இது இவர்களுடைய அடிப்படை நலன்களின் இயற்கையான வெளிப்பாடாக இருந்தது. . கிரீஸ், அல்போனியா, செக்கோஸ்லோவாக்கியாவின் மக்களும் பின்னர் நோர்வே, ஹாலந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் மக்களும் விடுதலைப் போரில் குதித்தனர்.

ஆனால், சோவியத்யூனியன் யுத்தத்தில் ஈடுபட்டதுதான் ஹிட்லர் கூட்டணியின் அரசுகளுக்கு எதிரான யுத்தத்தின் விடுதலைத் தன்மையை நிர்ணயித்த முக்கிய தீர்மானகரமான காரணியாக இருந்தது. சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தம் *(1941-1945)* தொடங்கியதும் இரண்டாவது உலகயுத்தம் முதலாளித்துவ அமைப்பின் எல்லை

அளிக்குமாறும் போலந்திற்கு காலக்கெடு தந்து ஜேர்மனி 1939 ஆம் ஆண்டு மார்ச் 21-ல் கோரிக்கையை விடுத்தது போலந்து அரசாங்கம் இந்தக் கோரிக்கைகளை நிராகரித்தது.

ஏப்ரல் 3 ஆம் திகதி ஜேர்மனியப் படைத்தலைமை போலந்தின் மீது தாக்குதல் தொடுக்கும் திட்டத்தை உருவாக்க ஆரம்பித்தது. இத்திட்டம் வெள்ளைத்திட்டம் என்ற பெயரைப் பெற்றது. ஏப்ரல் 11ஆம் திகதி ஹிட்லர் யுத்தத்திற்கு தயாராகும் கட்டளையில் கைழெுத்திட்டார். ஒருவரையொருவர் பரஸ்பரம் தாக்குவதில்லையென்று 1934ல் செய்து கொள்ளப்பட்ட ஜேர்மன்- போலந்து உடன்படிக்கையை பாசிச ஜேர்மனி ஏப்ரல் 28 ஆம் திகதி முறித்துக்கொண்டு ஆக்கிரமிப்பிற்கான நேரடியான தயாரிப்பில் இறங்கியது. தன் பங்கிற்கு போலந்து இராணுவத் தலைமை தன்னாட்டின் மேற்கு எல்லைகளின் தற்காப்புத் திட்டத்தை தீட்டத் தொடங்கியது. போர்த் தந்திரத் தற்காப்பில் இறங்கி எதிரியை தடுத்து நிறுத்தவும் பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நேசநாட்டுத் துருப்புக்களின் தாக்குதலுக்கு தயார்ப்

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்



பிரிட்டினின் மார்டர் பீரங்கி அணியினர்

களைவிட்டு வெளிவந்தது, சோஷலிச அரசுக்கும் பாசிச ஜேர்மனிக்கும் இடையேயான போராட்டம் யுத்தத்தின் மையமாக அமைந்தது. ஹிட்லர் ஜேர்மனியின் பிற்போக்குத்தனமான, ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு மாறாக சோவியத் யூனியன் நியாயமான, விடுதலை நோக்கங்களை முன்வைத்தது. எனவேதான்

கொள்கை தவிடு பொடியானதைக் குறித்தது; இந்த யுத்தத்தின் உறுதியான பாசிச எதிர்ப்பு தலைமைக்கு வழிகோலியது. சோவியத் யூனியன் பங்கேற்காது இருந்திருந்தால், பாசிசத்தின் மீது ஆழ்ந்த அனுதாபம் காட்டி ஹிட்லருடன் சதி செய்ய எப்போதுமே தாயாராக இருந்த பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பாசிசத்திற்கு எதிரான உறுதியான போராட்டத்தில் இறங்கியிருப்பார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. இரண்டாவதாக, சோவியத்யூனியன் யுத்தத்தில் இறங்கி

யத்தின் காலனியாதிக்கத்திற்கு எதிரான காலனி மற்றும் சார்பு நாட்டு மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தியது.

சர்வதேச ஏகாதிபத்தியம் திட்டமிட்டபடி யுத்தம் நடைபெறவில்லை. சோவியத் யூனியனுக்கு எதிரான சிலுவைப்போருக்குப் பதில் ஹிட்லர் தனது படைகளை முதலாவதாக, பிரிட்டிஷ், பிரெஞ்சு கூட்டிற்கு எதிராக அனுப்பினார். பிரபல பிரெஞ்சு அரசியல் பிரமுகர் ஏரியோ சரியாகக் குறிப்பிட்டபடி பாசிச ஜேர்மனி, தன் கழுத்துக் கயிற்றை அறுத்து, எஜமானனையே கடித்த நாயைப்போலிருந்தது.

போலந்தை அடுத்து டென்மார்க், நோர்வே, ஹாலந்து, பிரான்ஸ் பின்னர் பால்கன் நாடுகள் பாசிச துருப்புகளால் கைப்பற்றப்பட்டன. பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் பிரிட்டிஷ் பயணப்படைகள் தோல்வியுற்றன. இத்துடன் யுத்தத்தின் முதல் கட்டம் முடிவடைந்தது.

*1. ஜேர்மன்- போலந்து யுத்தம் (1939 செப்ரெம்பர்)*

**வி.அ.மத்சுலேன்கோ**

படுத்திக் கொள்ள நேரத்தைப் பெறுவதுதான் இத்திட்டத்தின் சாரம். மேற்கொண்டு பொதுவான எதிர்த்தாக்குதலுக்கு தாயாராகி நிலவரத்திற்கு ஏற்றபடி செயற்பட வேண்டும்.

(தொடரும்)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது சிக்கலான விடயம்

## நோர்வே தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமே இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நோர்வே தெரிவித்துள்ளது.

நோர்வேயின் தூதர் கெய்டி ஹரால்ட்ஸ்ராட் இது தொடர்பில் இலங்கையின் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துத்துக்கும் இடையிலான சமாதானம் நோக்கிய கலந்துரையாடல்களை நோர்வே அரசாங்கம் வரவேற்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதே இலங்கை மக்களை பொறுத்தவரையில் மிகவும் சிக்கலான விடயமாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

நோர்வேயில் சுமார் 14 ஆயிரம் புலம் பெயர் தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் நோர்வே பிரஜைகளாவர். அவர்கள் நோர்வேயின் சமூகத்துக்கு தமது பூரண பங்களிப்பை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட இனத்தினரை வைத்துக் கொண்டு நோர்வே தமது வெளிநாட்டு கொள்கை தொடர்பான கருத்துக்களை வெளியிடாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதான பேச்சுக்களின் போது நோர்வே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சார்பாக நடந்து கொள்ளவில்லை.

இலங்கை அரசாங்கத்தினால் சமாதான ஏற்பாட்டாளராக அழைக்கப்பட்ட நோர்வே எந்த ஒரு விடயத்தையும் மறைத்து செயற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சட்டவிரோதமாக சிசுவை வைத்திருந்த பெண் கைது

பதின்நான்கு நாட்கள் வயதுடைய சிசு ஒன்றை சட்டவிரோதமாக வைத்திருந்த பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக துறைமுக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரிற்கு கிடைத்த தகவலை அடுத்து மேற்படி பெண்ணை கைது செய்ததாகவும் மேற்படி பெண் கட்டுக்கொட பிரதேசத்தில் வசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

மேற்படி பெண் வைத்திருந்த கைக்குழந்தையை காலி நகரைச் சேர்ந்த பெண் ஒருவரினால் கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி தனியார்வைத்தியசாலைஒன்றில்பிரசுவித்துள்ளதாகவும் குழந்தையை வளர்ப்பதற்காக தம்மிடம் அப்பெண்பெற்றுத்தந்துள்ளதாகவும்விசாரணைகளின் போது குறித்த பெண் கூறியுள்ளார்.

கைது செய்துள்ள பெண்ணையும் கைக்குழந்தையையும் காலி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-2)

## இந்திய மற்றும் சீன படையினருக்கு இலங்கையில் இராணுவப்பயிற்சி

(கொழும்பு)

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை சேர்ந்த படையினர் இலங்கையில் இராணுவப் பயிற்சியில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா, சீனா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 64 படை உத்தியோகத்தர்கள் இலங்கையில் பயிற்சி பெற்றுக்கொள்ளவுள்ளதாக இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய அறிவித்துள்ளார்.எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இந்தப் பயிற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

'பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டுப் படையினர் இலங்கை இராணுவத்துடன் இணைந்து பயிற்சி பெற்றுக்கொள்ளும் முதல் சந்தர்ப்பமாக,இதனைக் கருத முடியும் என இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுப் படையினர் தங்களது அனுபங்களையும் தந்திரோபாயங்களையும் இலங்கை இராணுவத்தினருடன் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.பயங்கரவாத இல்லாதொழிப்பு தொடர்பான அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுமாறு பங்களாதேஷ், இலங்கை, இராணுவத் தளபதியிடம் கோரியுள்ளது. (அ-2)

## உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டமூலம் பிறிதொரு தினத்தில் சமர்ப்பிக்கப்படும்

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டமூலம் திருத்தங்களுடன் வேறொரு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் சபையில் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி அதிகாரசபைகள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலம் என்பன விவாதத்திற்கு எடுப்பதற்காக ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.


தினப்பணிகள் தொடர்பில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவிப்பு விடுத்ததையடுத்து மேற்படி இரு திருத்தச் சட்டமூலங்கள் நேற்று முன்தினம் விவாதத்திற்கு எடுக்கப் படமாட்டாது என மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா அறிவித்துள்ளார்.

இதற்கான காரணம் என்ன என எதிர்த்தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக சஜித் பிரேமதாச எம்.பி, தேர்தல் ஆணையாளர் அடங்கலான பலர் திருத்தங்கள் சமர்ப்பித்துள்ளனர். அவை குறித்தும் கவனம் செலுத்தி சகலரும் ஏற்கக் கூடிய திருத்தச் சட்ட மூலம் வேறொரு தினத்தில் சபையில் சமர்ப்பிக்கப் படும் என்றார்.

இதேவேளை ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் இரு திருத்தங்களை பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தார்.

வேட்புமனு தயாரிக்கும் போது மொத்த வேட்பாளர் தொகையில் 25 வீதம் பெண்களுக்கும் 25 வீதம் இளைஞர்களுக்கும் ஒதுக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (அ-2)




சேதமாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவை புனர்நிர்மாணம் செய்வதற்கு அக்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்த்தன நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நிதியுதவி வழங்கியதைப் படத்தில் காணலாம்.

## இலங்கை மீனவர்களை உடன்விடுவிக்க இணக்கம்

### கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

இந்தியாவின் அந்தமான் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 இலங்கை மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்காது விரைவில் விடுதலை செய்வதற்கான திட்டமொன்றை தயாரிப்பதற்கு இந்திய அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் அமைய இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை காரணமாக தற்போது இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 இலங்கை மீனவர்களும் 13 படகுகளும் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக கடற்றொழில் அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (அ-2)

## விபத்துச்சம்பவத்தில் பாதசாரி உயிரிழப்பு

கதிர்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 1.15 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றின் போது பாதசாரியொருவர் ஸ்தலத்திலே யே பரிதாபகரமாக பலியானதுடன் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

இவ்வாகன விபத்தில் கதிர்காமத்தைச் சேர்ந்த 39 வயதுடைய பலகமகே அனுர என்பவர் பலியாகியுள்ளதுடன் படுகாயமடைந்துள்ள சாரதி கதிர்காம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

## போலி மின்னஞ்சல்கள் அனுப்பப்படுகின்றன

### எச்சரிக்கையுடன் இருக்க பணிப்பு

(கொழும்பு)

இலங்கை கணனி அவசர உதவி அணி ஒழுங்கமைப்பு மையம், பிரபல தனியார் வங்கிகளின் பெயரைப் பயன்படுத்தி அனுப்பப்படும் மின்னஞ்சல்களால் ஏமாற்றமடைய வேண்டாம் என்றும் பொது மக்களை எச்சரித்துள்ளது.

தனி நபர்களின் வங்கித் தகவல்களைப் பெற்றுக்கொள்ள சில இணையத்தளங்கள் மேற்கொள்ளும் ஏமாற்று வேலையே இதுவென மேற்படி ஒழுங்கமைப்பு கூறியுள்ளது.

ஒன்லைன் வங்கித் தொழிற்பாட்டுக்கான பெயர்கள், கடவுச்சொற்கள் உட்பட முக்கிய வங்கித் தகவல்களை அறிந்து கொள்வதற்காக போலி மின்னஞ்சல்கள் அனுப்பப்படுவதாக ஒழுங்கமைப்பு மையத்தின் சிரேஷ்ட தகவல் பொறியியலாளர் றோஹன பல்லியகுரு கூறியுள்ளார்.

இவ்வாறான மின்னஞ்சல்கள் தொடர்பில் 10 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கிடைக்கப்பெறும் மின்னஞ்சல்களை திறந்து பார்க்க வேண்டாமென அவர் ஒன்லைன் வங்கி முறையை பயன்படுத்துவோரிடம் கேட்டுள்ளார்.

மேற்படி ஒழுங்கமைப்பு மையம், இவ்வாறான போலி ஒன்லைன் வங்கித்தொழில் இணையத்தளங்கள் பல வற்றை செயலிழக்கச் செய்துள்ளது.

ஆனால் தொழிற்படும் போலி நிறுவனங்கள் பலவும் இப்போதும் உள்ளன என அவர் கூறியுள்ளார்.

தமது வங்கியினால் பாதுகாப்பு காரணத்துக்காக வழங்கப்பட்டுள்ள இரகசிய இலக்கம் போன்ற இரகசியங்களை பேணிக்கொண்டால் பிரச்சினை ஏதும் ஏற்படாது என பிரபல தனியார் வங்கியொன்றின் உதவிப் பொது முகாமையாளர் ஒருவர் கூறினார். (அ-2)

# பரீட்சை முடிவுகளில் எவ்வித குளறுபடிகளும் இல்லை

## ரணிலின் கோரிக்கைக்கு பந்துல கருத்து

(கொழும்பு)

அண்மையில் வெளியிடப்பட்ட கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் எந்தவித குளறுபடிகளும் இல்லை என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவே அவர் மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

பரீட்சை பெபேறுகள் தவறு என்று இதுவரை எந்தவொரு பரீட்சார்த்தியும் வாய் மூலமோ அல்லது எழுத்து மூலமோ முறைப்பாடு எதுவும் செய்யவில்லை.

பரீட்சை நடத்துவது முதல் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான சகல உரிமைகளும் பரீட்சை ஆணையாளருக்கும் பரீட்சை திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. அதில் எவரும் தலையிடமுடியாது.

பரீட்சை திணைக்களம் 40 வெளிநாட்டு பரீட்சைகள் உட்பட 364 பரீட்சைகளை ஒரு வருடத்துக்கு நடத்துகின்றது. இவை அனைத்துக்குமானஅதிகாரம் திணைக்களத்துக்கு மட்டுமே உள்ளது.

பாடசாலைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சு செயற்பட்டாலும் பரீட்சைகள் தொடர்பில் எவ்வித தலையீடுகளும் செய்வதில்லை.அந்த வகை



யில் நானோ அல்லது அமைச்சின் செயலாளரோ எந்தவித தலையீட்டையும் மேற்கொள்ளவில்லை .

எனவே பரீட்சை திணைக்களத்தில் அரசியல் தலையீடு எதுவும் இல்லை என உறுதிபட கூறமுடியும். எனினும் இது தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் கோரியிருந்தார்.அவ்வாறானதொரு அவசியம் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

அண்மையில் வெளியிடப்பட்ட கல்வி பொதுத்தராதர உயர்தரபரீட்சை பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்வதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாளான நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிவரை 50 ஆயிரத்து 724 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

கடந்த 2010 ஆம் ஆண்டில் பரீட்சை முடிபுகள் மீள் பரிசீலனைக்காக 62 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்தன.இவ்வருடம் 50 ஆயிரத்து 724 ஆக அவை குறைந்துள்ளன.

எதிர்க்கட்சி தலைவர் உரையாற்றும் போது இவ்வருடம் 60 ஆயிரத்துத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிந்ததாகக் குறிப் பிட்டார்.

எனினும் அனைவரும் எதிர்பார்த்தது போன்று இம்முறை பெரும் எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை என்பதில் இருந்தே பரீட்சையில் குளறுபடிகள் நடக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப் படுகின்றது. எனவே பரீட்சைகளை அரசியலாக்க முயல வேண்டாம் என்றும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார். (அ-2)

## வாகன விபத்தில் 9 பேர் படுகாயம்

கல்கிசை காலி வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒன்பது மாணவர்கள் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றது.இது தொடர்பாகத் தெரியவருவதாவது, பாடசாலை வானொன்றும் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதாலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்தவர்களில் இரு மாணவர்கள் ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் விபத்துச் சம்பவத்தினால் இன்று காலைசம்பவஇடத்தில்பெரும்வாகனநெரிசல் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## குற்றச்செயல்களை தடுப்பதற்காக கொழும்பில் மேலும் கமராக்கள்

கொழும்பில் கண்காணிப்புகளை தீவிரப் படுத்தவும் குற்றச்செயல்களைத் தடுக்கவும் போக்குவரத்து விதிகளை மீறுவோரை கண்டறிவதற்காகவும் மேலும் 100 கண்காணிப்பு கமராக்களை பொருத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு 28 இடங்களில் 350 மில்லியன் ரூபா செலவில் 108 கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.ஒல்கொட் மாவத்தையிலுள்ள பொலிஸ்கட்டடமொன்றில் விசேட பொதுக்குழு ஒன்று இக் கமராக்கள் மூலம் கண்காணிப்புக்களை மேற்கொள்கிறது. புதிதாக பொருத்தப்படவுள்ள கமராக்கள் நபர்களின் முகங்களையும் வாகனங்களின் இலக்கத் தகடுகளையும் இனங்காணக்கூடிய வகையிலானதாக இருக்கும்.

குற்றச்செயல்களின் பின்னர் தப்பிச் செல்லும் குற்றவாளிகளை இனங்காண்பதற்கு இக்கமராக்கள் பயன்படுத்தப்படும் என பொலிஸ் பேச்சாளர் அஜித்ரோஹன கூறியுள்ளார். (அ-2)

## மாணவர்களுக்கு அநீதி ஏற்படுவதை தடுப்பதற்கு உகந்ததே இசட் புள்ளி

### ரணிலின் கோரிக்கைக்கு எஸ்.பி.பதில்

மாணவர்களுக்கு அநீதி ஏற்படுவதைத் தடுக்கவே இசட் புள்ளி முறை அமுல்படுத்துவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரைக்கு பதில் அளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு மேலும் கூறியதாவது,

சிலசமயங்களில் சில கேள்விப் பத்திரங்கள் மிகவும் இலகுவாக அமைந்து விடுகின்றன.சில சமயங்களில் கடினமாகவும் அமைந்து விடுகின்றன. இது சிலருக்கு சார்பானதாகவும் அமைந்து விடுகின்றன.மற்றும் சிலர் பல்கலைக்கழகத்துக்கு நுழைந்து விட வேண்டும் என்பதற்காக இலகுவான பாடங்களையே தெரிவு செய்கின்றனர்.இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக ஒரு சாராருக்கு அநீதி ஏற்ப்டுகிறது.இந்த அநீதிகளைத் தடுக்கும் நடவடிக்கையாகவே இசட் புள்ளி முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதனால்தான் எவருக்கும் அநீதி ஏற்படாத வகையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது.

இசட் புள்ளி முறை நீக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கையை முன்வைத்தார்.ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் 17 ஆயிரமாக இருந்த பல்கலைக்கழக அனுமதியை இப்போது 5ஆயிரமாக அதிகரிக்கச் செய்துள்ளோம் என்றும் அமைச்சர் கூறினார்.(அ-2)

## அரசாங்கம் தனது செலவுகளை ஈடுசெய்ய மக்கள் மீது வரிச்சுமையை திணிக்கின்றது


### திஸ்ஸ அத்தநாயக்க காட்டம்

அரசாங்கம் அத்தியாவசிய பண்டங்கள் சிலவற்றுக்கான இறக்குமதி தீர்வையை அவசரமாக அதிகரித்து மக்கள் மீது வரிச்சுமை யை திணித்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கத்தின் செலவுகளை ஈடு செய்யும் நோக்கில் சாதாரண மக்களின் மீது வரிச்சுமை திணிக்கப்பட்டுள்ளது.இந்த நடவடிக்கையை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பெருந்தொகையான அமைச்சர்கள் மற்றும் ஆலோசகர்களை பராமரிக்கும் காரணத்தால் அரசாங்கம் பெரும் செலவுகளை எதிர்நோக்கி வருகின்றது.

இந்த செலவுகளை ஈடு செய்ய அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உயர்த்துவது முறையல்ல என திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)



இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் 5 முக்கிய விடயங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கையெழுத்திடப்பட்டது. இதில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் இலங்கைவெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் இந்த புரிந்துணர்வு ஒப்பந் தங்களில் கையெழுத்திடுவதைப் படத்தில் காணலாம்.

## தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு அல்ல?

### நெதர்லாந்து நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

நெதர்லாந்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்த குற்றச்சாட்டின் பேரில் தண்டனை பெற்றுள்ள ஐந்து இலங்கைத் தமிழர்களும் தாக்கல் செய்த மேன் முறையீட்டின் விசாரணைகள் அண்மையில் ஹேக்கில் ஆரம்பமாகின.

குறித்த ஐந்து பேரினதும் வழக்கு தீர்ப்பின் போது கடந்த 2011 ஒக்டோபர் 21 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு அல்ல என்று நீதிபதி அறிவிருந்திருந்தார்.

இந்நிலையில் பயங்கரவாத பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் நீக்கப்பட வேண்டும்.

அத்துடன் பயங்கரவாத அமைப்பாக கருதப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதியளித்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டுள்ள ஐவரினதும் தீர்ப்புக்கள் இரத்து செய்யப்பட வேண்டும் என்று குறித்த ஐந்து பேரினதும் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் புறுமா, விக்ரர் கோபி ஆகியோர் லக்சம்பேக் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டை தாக்கல் செய்தனர். இது தொடர்பான வழக்கு விசாரணை அண்மையில் ஆரம்பமாகியுள்ளது.

இதேவேளை இந்த மேன் முறையீட்டின் போது விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு அல்ல என்பது ஏற்றுக் கொள்ளப்படுமானால் அது முழு ஐரோப்பாவிலும் விடுதலைப்புலிகள் அமைப்பு தொடர்பாக கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் என உலக நெதர்லாந்து வானொலி தெரிவித்துள்ளது. (அ-2)

# காணாமற் போனோர் பட்டியல் இந்த ஆண்டிலும் நீள்கிறது..

பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் முதலில் இலங்கையின் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழர்களாவர். ஆனால், தற்போது இலங்கையில் தனியான இனங்களாகக் கருதப்படும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள்கூட குறிவைக்கப்படுகின்றனர். காணாமற்போன சிலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பிரித்தானியாவை தளமாகக் கொண்ட எக்கொனமிஸ்ற் சஞ்சிகையில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரமாவது,

இலங்கையில் நீண்ட கால மாகத் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை வெளியேற்றியதன் மூலம் இலங்கை அரசாங்கம் பெற்ற வெற்றியானது நாட்டில் அமைதியைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால், இப்போது அது அவ்வளவு இலகுவான செயலாக தெரியவில்லை. ஏனெனில் தற்போது, பலதரப்பட்டவர்களும் காணாமற் போகின்றனர். இதற்கான காரணத்தை எவரும் அறியவில்லை. ஆனால், சிலர் அரசாங்கத்தை குற்றம் சாட்டுகின்றனர்.

இலங்கையின் வடக்கில் கடந்த டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி அரசியற் செயற்பாட்டாளர்களான லலித்குமார் வீரராஜா மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமற்போன சம்பவமானது இங்கு வாழ்வோர் ஆபத்தில் இருப்பதையே குறிக்கிறது.

ஜனவரி 09 அன்று இலங்கைத் தலைநகரான கொழும்பில் நூற்றுக்கணக்கானோர் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், காணாமற்போன அரசியற் செயற்பாட்டாளர்களை இலங்கை அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என்றும், வடக்கில் கைது செய்யப்படும் சம்பவங்கள் உடனடியாக முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும், யுத்தம் இடம்பெற்ற வலயங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இவ்வாறான கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதற்கு எதிர்மாறான சம்பவங்களே இடம்பெறுகின்றன.

போரால் காணாமற்போன பல நூறு தமிழர்கள் சார்பாக வீரராஜா மற்றும் முருகானந்தன் ஆகிய இருவரும் கடந்த சில மாதங்களாகப் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். காணாமற்போன தமிழ்மக்களில் பெரும்பாலானவர்கள் இறுதிப் போரின்போது பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப் பட்டவர்களாவர். இலங்கையின் வடக்கு நகரமான யாழ்ப்பாணத்தில் வைத்துக் காணாமற்போன இவ்விரு ஆர்வலர்களும் உந்துருளியில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுப் பின்னர் வெள்ளை வானில் கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் பெருமளவு குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரே இக்கடத்தல் சம்பவத்துக்குப் பொறுப்பாளிகள் என பிறிதொரு முக்கிய செயற்பாட்டாளரான உடுல் பிறேமறட்ணா தெரிவித்துள்ளார். மாலைப் பொழுதில் இடம்பொற்ற இச்சம்பவத்தை பார்த்த சாட்சியங்கள் சில உள்ள போதிலும், இவ்வழக்கை மேற்கொண்டு தொடர்வதற்கான போதியளவு சாட்சியங்கள் தம்மிடம் இல்லை என காவற்துறையினர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைமை தற்போது பழக்கப்பட்ட விடயமாக உள்ளது. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவானது கடந்த டிசம்பரில் வெளியிட்ட தனது அறிக்கையில், 'கடத்தல்கள், பலவந்தமான காணாமற்போதல் மற்றும் தன்னிச்சையான தடுப்புகள்' போன்றன தொடர்பாக பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.



அமைப்பு விமர்சனங்களை மேற்கொள்வதென்பது அரிதான விடயமாகும். ஆனால், கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது இலங்கையிலுள்ள சட்ட நடைமுறை சிதைவடைந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளது. குற்றங்களை விசாரணை செய்து சட்ட நடைமுறைகளை மீறுவோரை சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மூலம் நீதியின்முன் நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லி ணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கோரியுள்ளது.

பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் முதலில் இலங்கையின் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழர்களாவர். ஆனால், தற்போது இலங்கையில் தனியான இனங்களாகக் கருதப்படும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள்கூட குறிவைக்கப்படுகின்றனர். காணாமற்போன சிலர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனவரி 03 அன்று நள்ளிரவில் இதில் உள்ளதாகவும் பாங்கொங்கைத் தளமாகக் கொண்டியங்கும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. காணாமற் போதல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் எந்தவொரு துறைகளும் ஈடுபடவில்லை என இலங்கை அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரு மொழிகளைத் தெரிந்து வைத்துள்ள, சிங்கள-தமிழ் கலப்பினரான திரு. வீரராஜா முன்னர் இரு தடவைகள் இனந்தெரியாத நபர்களால் கூட்டிச் செல்லப் பட்டிருந்தார். இவர்கள் இராணுவ வீரர்கள் என இவரது நண்பர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இரு தடவைகளும் இவர் விடுவிக்கப்பட்டபோதிலும் மூன்றாவது தடவை இவர் அந்த நல்வாய்ப்பைப் பெறவில்லை.

கடத்தப்பட்ட இரு ஆர்வலர்களினதும் பெற்றோர் இச்சம்பவம் தொடர்பாக ஐ.நா.விற்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர். இந்த விண்ணப்பம் தற்போது ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கி மூனின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர் முஸ்லிம்களும் குறிவைக்கப்படுகின்றனர்



விடுதலைப்புலிகளுக்கு எதிராக வெற்றி பெறுவதற்கு அரசாங்கத்தை தலைமை தாங்கிய ஜனாதிபதி மகிந்த இராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட இவ்வாறானதொரு சிங்கள இனத்தைச் சேர்ந்த 25 வயதுடைய டினேஸ் புத்திகா சரிற்றானந்தா கடத்தப்பட்டார். இவர் கடத்தப்பட்ட மறுநாட் காலை கொழும்பு புறநகர்ப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார். முஸ்லிம் சோதிடரான மொகமட் நியாஸ் என்பவர் கடந்த ஒக்டோபரில் துப்பாக்கிதாரிகளால் வெள்ளைவான் ஒன்றில் கடத்தப்பட்டார். மூன்று வாரங்களின் பின்னர் இவரது சடலமும் கண்டு பிடிக்கப்பட்டது.

இலங்கை காவற்துறையின் அறிவிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தெரிந்தவகையில் இவ்வாறான கடத்தல்கள் மற்றும் கொலைகள் இடம் பெறுவதாகவும் காவற்துறை அதிகாரிகளின் ஒப்புதல்கள்

உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து காணாமற்போன சம்பவம் தொடர்பாக உரிய தீர்வை எட்ட முடியாததாலேயே பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள் அனைத்துலக

**பிரித்தானிய ஊடகம் தெரிவிப்பு**

அமைப்பொன்றை நாடியுள்ளதாக திரு. பிறேமரத்னா குறிப்பிட்டுள்ளார். "என்னைப் பற்றியதகவல்களையும் தயாராக வைத் திருங்கள், கடத்தப்படுபவர்களில் நான் அடுத்ததாக இருக்கலாம்" எனவும் அவர் கூறியுள்ளார்.





(யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரம்மஸ்ரீ சுந்தர செந்தில்ராஜக் குருக்கள் மங்கல விளக்கேற்றுவதனையும் கௌரவிக்கப்பட்ட மழலைகளையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)*

## தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது

புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் மற்றும் முன்னாள் மொழிபெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இருவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து கொழும்பு நீதிமன்றம் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தயா மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோரை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரையும் புலனாய்வுப் பிரிவினரின் ஒப்புதலுடன் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

தயா, ஜோர்ஜ் மாஸ்டர் ஆகிய இருவர் தொடர்பில் எவ்வாறானா நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை வழங்க வேண்டுமென கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி தெரிவித்துள்ளார்.

குறித்த இருவருக்கும் எதிராக வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தும் திட்டம் தொடர்பில் சந்திரிக்கா பேசினார்

### புத்திக்க எம்.பி.தெரிவிப்பு

அரசாங்கத்தை கவிழ்க்கும் திட்டம் பற்றி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தம்மிடம் கூறினார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

ஒழுங்கான ஒரு தலைவர் இருந்தால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டத்தை குறிப்பிடுவதாக சந்திரிக்கா தம்மிடம் மெய்யாகவே குறிப்பிட்டார். இது தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மையானவை. டுபாய் விமான நிலையத்தில் சந்திரிக்கா இதனைக் குறிப்பிட்டார் என புத்திக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சரியான பழக்கமில்லாத நாடாளுமன்ற உறுப்பினருடன் இணைந்து அரசாங்கத்தை கவிழ்ப்பது குறித்து பேசும் அளவிற்கு தாம் முட்டாள் கிடையாது என சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

வலுவான ஒரு தலைவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைமை தாங்கினால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் இரகசியத்தை தாம் சொல்லித்தருவதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை.

ஆட்சி அமைத்தல் மற்றும் இல்லாமல் செய்தல் ஆகிய கருமங்களிலிருந்து தாம் விலகிக் கொண்டுள்ளேன். 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு விடுத்த கோரிக்கையை நான் முற்று முழுதாக நிராகரித்தேன்.

இந்நிலையில் வலுவான ஓர் எதிர்க்கட்சியின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது என்று மாத்திரமே புத்திக்க பத்திரனவிடம் குறிப்பிட்டதாக சந்திரிக்கா தெரிவித்துள்ளார். (அ-2)

## சீன தொல்பொருள் ஆய்வாளர்களின் கோரிக்கையை இலங்கை நிராகரிப்பு

சீன தொல்பொருள் விஞ்ஞான கல்லூரியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைய இலங்கை தொல்பொருள்ஆய்வுமையம் நிராகரித்துள்ளது.

இலங்கையை அண்டிய கடற் பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சி நடத்துவது தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர் நாயகம் டாக்டர் செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் இலங்கையின் பல கடற்பகுதிகளில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுவது குறித்து சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

எனினும் ஒப்பந்தத்தின் சில சரத்துக்கள் தொடர்பில் இலங்கை அதிருப்தி வெளியிட்டுள்ளது. குறிப்பாக அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெறும் பொருட்களில் ஒரு பகுதியை எடுத்துச் செல்லல் மற்றும் அகழ்வாராய்ச்சிக்காக இலங்கைக் கடற்படை கப்பல்களை பயன்படுத்தல் போன்ற நிபந்தனைகளுக்கு இலங்கை எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இதேநேரம் பண்டைய காலத்தில் மூழ்கிய சீனக் கப்பல்கள் குறித்து ஆராயும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், சீன தொல்பொருள் விஞ்ஞான கல்லூரியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என தொல்பொருள் ஆய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ-2)




★ *1788*-இங்கிலாந்தில் இருந்து கைதிகளை ஏற்றி வந்த இரண்டாவது தொகுதி கப்பல்கள் நியூ சவுத் வேல்ஸ்சின் பொட்டனி பே பகுதியை வந்த டைந்தது.

★ *1806*-நன்னம்பிக்கை முனையை பிரித்தானியா கைப்பற்றியது.

★ *1839*-பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனி யேமனின் ஏடென் நகரைக் கைப் பற்றியது.

★ *1899*-ஆங்கிலோ- எகிப்திய சூடான் அமைக்கப்பட்டது.

★ *1903*-ஐக்கிய அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே முதலாவது வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாகியது.

★ *1917*-லண்டனில் ஆயுதக் களஞ்சியம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 73 பேர் உயிரிழந்தனர். 400 பேர் காயம் அடைந்தனர்.

★ *1927*-பிரித்தானியா சீனாவுக்கு படைகளை அனுப்பியது.

★ *1941*-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் இத்தாலி வசமிருந்த எரித்திரியாவை தாக்கின.

★ *1942*-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் பர்மாவை முற்றுகையிட்டன.

★ *1966*-இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ *1981*-ஈரானில் 14 மாதங்களுக்கு முன்னர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 52 அமெரிக்கர்களை விடுவிக்க ஐக்கிய அமெரிக்காவும் ஈரானும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

★ *1983*-நாசி போர்க் குற்றவாளி கிளவுஸ் பார்பி பொலிவியாவில் கைது செய்யப்பட்டான்.

★ *1986*-முதற் கணனி நச்சுநிரலான பிரெயின் பரவத் தொடங்கியது.

★ *1997*-30 ஆண்டுகளுக்குப் பின்னர் யாசர் அரபாத் ஹெப்ரோன் திரும்பினார்.

★ *2006*-சிலவாக்கியாவின் விமானப் படை விமானம் ஹங்கேரியில் வீழ்ந்து நொருங்கியது.

★ *2006*-புளூட்டோவுக்கான முதலாவது நியூ ஹரைசஸ் என்ற விண்ணுளவியை நாசா விண்ணுக்கு ஏவியது.

### பிறப்புக்கள்

★ *1736*-ஜேம்ஸ் உவாட், கண்டுபிடிப்பாளர் *(இ.1819)*

★ *1807*-ராபர்ட் ஈ லீ, அமெரிக்கப் பொறியியலாளர் *(இ.1870)*

★ *1809*-எட்கார் அலன் போ, அமெரிக்க எழுத்தாளர், கவிஞர் *(இ.1849)*

★ *1839*-பால் செசான், பிரெஞ்சு ஓவியர் *(இ.1906)*

★ *19112*-லியோனிட் கண்டரோவிச், நோபல் பரிசு பெற்ற ரஷ்சியப் பொருளியலாளர் *(இ.1986)*

### இறப்புக்கள்

★ *1905*-தேவேந்திரநாத் தாகூர், இந்தியப் பகுத்தறிவாளர் *(பி.1817)*

★ *1990*-ஓஷோ, இந்திய ஆன்மீகவாதி *(பி.1931)*



★ *1933*- கர்நாடக திரையிசைப் பாடகர் சீர்காழி எஸ். கோவிந்தராஜனின் பிறந்த தினம் *(இ.1988)*

# இலங்கை கிரிக்கெட் அணி தோல்விகளுக்கு வீரர்களின் ஒற்றுமையின்மையே காரணம்

## அமைச்சர் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் குழுவில் ஒற்றுமையை ஏற்படுத்த அதிகாரிகள் கடினப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும் இல்லாவிட்டால் தோல்விகள் தொடர் கதையாகிவிடும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்பங்களுக்காக வீரர்கள் விளையாடுவதை விடுத்து நாட்டுக்காக விளையாட வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். தைப்பொங்கல் தினத்தன்று அவிசாவளையிலுள்ள 20 விளையாட்டு கழகங்களுக்கு ரூபா 10 ஆயிரம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அமைச்சர் தொடர்ந்து உரையாற்றும் போது ஒற்றுமையின்மை மற்றும் அர்ப்பணிப்புடன் நாட்டுக்காக விளையாடாமையே இலங்கை கிரிக்கெட் அணியின் தொடர் தோல்விக்கு காரணமாகும். விளையாட்டுத் துறையில் ஏனைய அணிகளை முந்திச் செல்லக் கூடிய ஆற்றல் அணிக்கு இருந்த போதும் ஒற்றுமையின்மை அர்ப்பணிப்பு இல்லாவிட்டால் போட்டிகளில் வெற்றி பெற முடியாது.

எமது நாட்டில் இன்று அனைத்து துறைகளிலும் உயர்வு ஏற்பட்டுள்ளது. அந்த உயர்வு விளையாட்டு துறையிலும் ஏற்பட வேண்டும்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளால் மேற்கொள்ள முடியாத வேலையை விளையாட்டு வீரர்களால் முன்னெடுக்க முடியும்.

விளையாட்டுத்துறை, சினிமாத்துறைகளில் எமது பிள்ளைகள் வெளிநாடுகளில் வெற்றிகளை பெற்றுள்ளனர். அத்தோடு விளையாட்டின் மூலம் நோயற்ற பலசாலிகளான எதிர்கால சந்ததியினரை நாட்டில் உருவாக்க முடியும்.

எமது நாடு தொடர்பில் தெளிவான செய்திகளை விளையாட்டு மூலம் வெளிநாடுகளுக்கு வழங்க முடியும். இலங்கை கிரிக்கெட் அணி போட்டிகளில் தொடர் தோல்விகளை கண்டு வருகிறது. இதற்கு வீரர்களிடையே ஒற்றுமையின்மையே காரணமாகும்.

எமது தாய் நாட்டுக்காக விளையாட வேண்டுமானால் எம்மிடையே பிளவுகள் இருக்கலாகாது. முரண்பாடுகள் இருந்தாலும் தாய் நாட்டுக்கு கௌரவத்தை பெற்றுக் கொடுப்பதில் ஒற்றுமையாக விளையாட வேண்டும்.

எனவே, இவ் ஒற்றுமையின்மை தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். அதற்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

இல்லையேல் தோல்விகள் தொடர் கதையாகி விடும் என்றார். (அ-2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யா/ இந்து மகளிர் கல்லூரியில் க.பொ.த. (சா/த) பரீட்சை -2011 இற்கு தோற்றிய மாணவர்களுக்கு பாடத்தெரிவு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, அனைத்து பெற்றோர்களும் மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

(அ-2)

# பரீட்சை முடிபுகள் குறித்த பரிந்துரையை முழுமையாக அமுல்படுத்த ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்ட குளறுபடிகள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் முன்மொழியப்பட்டிருக்கும் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சு, உயர்கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளில் மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான நிலைகளில் குளறுபடிகள் காணப்பட்டன.

இந்தக் குளறுபடிகள் திருத்தப்பட்டு மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான நிலைகள் மீண்டும் வெளியிடப்பட்ட போதும் இது தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு நிபுணர் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

இந்தக் குழு கடந்த வாரம் தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தது.

இக்குழுவின் அறிக்கையில் முன்மொழியப்பட்டிருக்கும் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உரிய தரப்பினருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

(அ-2)

# பதவி விலகல் செய்தி குறித்து விவாதம் நடத்தப்படும்

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் பதவியில் இருந்து தான் விலகப்போவதாகவும் பிரதமர் பதவியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் ஒரு பத்திரிகையில் வெளியான செய்தி குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சபாநாயகர் ஷமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது விசாரணை நடத்தப்பட வேண்டிய விடயம் எனவும் அவர் கூறியுள்ளார். மேற்படி பத்திரிகையில் வெளியான செய்தியின் படி சபாநாயகர் மற்றும் பிரதமர் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமா என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த செய்தி பொய்யானது என சபாநாயகர் கூறியதை அடுத்து அந்த செய்தி சம்பந்தமாக விசாரணை நடத்தப்படுமா என ரவி கருணாநாயக்க சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

இதனையடுத்தே இந்த செய்தி பற்றி விசாரணை நடத்தப்படும் என அவர் பதிலளித்துள்ளார். (அ-2)



மருத்துவம் சார் வாண்மை தொழில் சங்கத்தினர் சுகாதார அமைச்சுக்கு முன்னால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

# அனைத்து பல்கலை. மாணவ தலைவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது

## பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

மாணவர் தலைவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் முறைப்பாடு செய்துள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகள் பொலிஸ்மா அதிபரைச் நேரில் சந்தித்து இந்த முறைப்பாட்டை ஒப்படைத்துள்ளனர்.

ஆயுத படையினரால் மாணவர்கள் அச்சுறுத்தப்படுவதாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார். பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சந்தேகம் என்ற போர்வையில் மாணவர்கள் மீது நெருக்குதல்களை பிரயோகிக்க முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகளை தடுப்பதற்கு அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பத்தில் மாணவர் தலைவர்கள் வகுப்புத் தடைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் தற்போது ஆயுதப் படையினர் மாணவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தங்களை பொலிஸார் என அடையாளப்படுத்திக் கொண்ட பொதுவான உடை தரித்த சிலர் தம்மிடம் விசாரணை நடத்தியதாக சஞ்சீவ பண்டார குறிப்பிட்டுள்ளார்.

பாதாள உலகக் கோஷ்டி, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்பு உண்டா என குறித்த நபர்கள் தம்மிடம் விசாரணை செய்ததாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கை-பாகிஸ்தான் இடையே நீதித்துறை ஒத்துழைப்பு அவசியம்

## அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நீதித்துறை தொடர்பிலான ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றின் அவசியம் பற்றி நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீமா இலாஹி பலோச்சிடம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சீமா இலாஹி பலோச் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நீதியமைச்சில் நேற்று முன்தினம் சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

யுத்தம் முடிவடைந்து சமாதானம் நிலவும் காலப்பகுதியில் நாட்டில் பரவலாக அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறிய அமைச்சர் ஹக்கீம் உயர்ஸ்தானிகரின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போது அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இங்கு நீதி சீர்திருத்தம் சார்ந்த திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார். (அ-2)

# மீனவர்களின் படகுகளை கண்காணிக்க கட்டமைப்பொன்றை தயாரிக்க முடிவு

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

மீனவர்களின் படகுகளை கண்காணிப்பதற்கான கட்டமைப்பொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திரத்தில் நிறுவப்பட்டுள்ள செய்மதியின் உதவியுடன் படகுகளை பாதுகாப்பதற்கான கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

இதன்மூலம் மீனவர்கள் தங்களின் கடல் எல்லைகள் மற்றும் பல்வேறு தகவல்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீனவர்கள் குறிப்பாக பிற நாடுகளின் கடல் எல்லைகளை மீறுவதால் அந்த நாடுகளின் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்படும் நிலை இதன்மூலம் தவிர்க்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாட்டுக் கடல் எல்லைக்கு சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவுக்கு முன்பாகவே இந்த கட்டமைப்பு இயங்கி சமிக்ஞை ஒலி எழுப்பி மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மீன்பிடிப் படகுகள் அனர்த்தத்திற்கு இலக்காகின்றபோதிலும் கடலில் மீன்கள் அதிகம் சஞ்சரிக்கின்ற இடங்களையும் இந்தச் செய்மதிக் கட்டமைப்பின் மூலம் கண்டறிய முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஹெய்ட்டியில் விபத்து; 23 பேர் உயிரிழப்பு

(ஹெய்ட்டி)

ஹெய்ட்டி தலைநகரில் உள்ள பரபரப்பான தெருவில் டிரக். ஒன்று கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த பேருந்துமீதுமோதியதில் சம்பவ இடத்தி லேயே 23 பேர் பலியா கினர்.

50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். டிரக்கின் பிரேக்குகள் செயற்பாட்டை இழந்ததே விபத்திற்கு காரணம்எனபொலிஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ-2)

# இனந்தெரியாத இரு நபர்கள் பெண்கள் மீது மிளகாய்த்தூள் வீச்சு

திருகோணமலை பூம்புகார் கிராம சேவகர் பிரிவில் உள்ள வேளாங்கன்னி வீதியில் பயணித்து கொண்டிருந்த மூன்று பெண்கள் மீது இனம் தெரியாத இருவர் அதே வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்து மிளகாய்த்தூள் வீசிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நேற்று முன்தினம் காலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் மிளகாய்த்தூள் வீச்சுக்குள்ளானவர்களில் ஒருவர் பூம்புகார் மாதர் சங்கச் செயலாளர் யோகேஸ்வரி எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவருடன் இன்னும் இரண்டு பெண்கள் வீதியில் சென்று கொண்டிருக்கையில் அவ்வழியாக பல்சர் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரே இவர்கள் மீது மிளகாய்த்தூளை வீசி விட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த மாதர் சங்கச் செயலாளர் திருகோணமலைப் பிரதேச செயலகத்தில் நடந்த பொங்கல் நிகழ்வுக்குச் சென்ற வேளையே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அப்பகுதி பெண்கள் மத்தியில் அச்சமான நிலை ஏற்பட்டுள்ளது. (அ-2)

# சிகரெட் விற்கும் இயந்திரங்கள் மார்ச் மாதம் தடை செய்யப்படும்

## அயர்லாந்து சுகாதாரத்துறை அமைச்சு

(கொழும்பு)

சிகரெட் விற்கும் இயந்திரங்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதல் தடை செய்யப்படும் என்று அயர்லாந்து நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் எட்வின் பூட்ஸ் அறிவித்துள்ளார்.

இந்த சிகரெட் விற்பனையால் 16 வயதிற்கு குறைந்த சிறுவர்களும் புகை பிடிக்கத் தொடங்கி விட்டனர். இப்பழக்கம் இவர்களின் உடல்நலத்துக்கு மிகவும் கேடு விளைவிப்பதாகும். எனவே, இந்த விற்பனை முறையை நிறுத்திவிட அரசு முடிவு செய்துள்ளது.

இந்த சிகரெட்டுகளை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் அங்குள்ள சிறுவர்களும் புகைப் பழக்கத்திற்கு அடிமைப்படும் பரிதாபநிலை ஏற்படும். பிரிட்டிஷ் தீவுகளுக்குள் இவற்றை விற்காமல் ஏற்றுமதி செய்ய வாய்ப்பு இருப்பதால் அது குறித்து சிந்திக்க வேண்டும் என ஜிம் வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

அல்ஸ்ட்டெர் என்ற புற்றுநோய் அமைப்பு நடத்திய ஆய்வில் புகைப் பழக்கத்தால் நுரையீரல் புற்றுநோய், இதய நோய் மற்றும் ஆஸ்துமா போன்ற ப்ல்வேறு நோய்கள் உருவாகும் என்பதால் வருடத்திற்கு 2 ஆயிரத்து 700 பேர் உயிரிழக்கின்றனர் என்று தெரிவித்துள்ளது.

புகைப்பழக்கத்திற்கு ஆளானவர்களில் பாதிப் பேர் உயிர் கொல்லி நோயால் மரணமடைகின்றனர். இப்போது இங்குள்ள இளைஞர்களினால் 16 தொடக்கம் 19 வயதுடையவர்களில் 21 சதவீத்தினர் இப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டனர். பதினாறு வயதில் இப்பழக்கத்திற்கு ஆளாகி அதை நிறுத்தாமல் தொடர்பவர்கள் 50 சதவீதமாகும்.

எனவே, இந்நாட்டில் இளைஞர்கள் நடுவயதில் மரணமடைவதைத் தடுக்கவும் அவர்கள் நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழவும் உழைக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை சுகாதாரத்துறை எடுத்து வருகிறது. (அ-2)

# அசம்பாவிதங்களை தடுக்கும் நோக்கில் ரயில்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

(கொழும்பு)

இரவு பகல் தபால் சேவை புகையிரதம் மற்றும் நகர கடுகதி புகையிரதம் ஆகியவற்றில் பயணிக்கின்றவர்களின் பாதுகாப்பு கருதி பாதுகாப்பு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அசம்பாவிதங்களை தடுக்கும் நோக்கிலேயே ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொது முகாமையாளர் பி.ஏ.பீ. ஆரியரத்ன கூறினார்.

இந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவ்வப்போது பயணிகளை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு கோட்டையிலிருந்து சிலாபம் நோக்கி நேற்று முன்தினம் மாலை பயணித்தவர் புகையிரதத்தில் பயணித்த ஒருவரின் தங்க சங்கிலியை அபகரித்த ஒருவர் புகையிரதத்தில் பாய்ந்து காயங்களுக்குள்ளானதாக புகையிரதக் கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

## பொது அறிவித்தல்-2012

மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம்

***01. ஆதனவரி பற்றிய அறிவித்தல் -2012***

***வரியிறுப்பாளர்களுக்கு,***

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 141 ஆவது பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தற்போதைய வருடாந்த மதிப்பீட்டின் (10%) 2012 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி செலுத்தப்பட வேண்டும். ஆண்டு முழுவதற்குமுரிய ஆதனவரியை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருடத்திற்கான மொத்த வரியில் 10% கழிவும் ஒவ்வொரு கந்தாயங்களுக்குரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத இறுதி நாளுக்கு முன் செலுத்துவோருக்கு 05% கழிவும் வழங்கப்படும்.

***ஆதன வரி மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசெம்பர் 31 ஆம் திகதி களுக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.***

தவறின் வசிப்பிடங்கள், வெற்றுக்காணிகளுக்கு 15% உம் வியாபார நோக்கங்களுக்காக பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20% உம் விறாந்து கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2012 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் நிலுவையின்றி செலுத்தி வரிக் கழிவுகளை பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலைவரிப் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

***02. துவிச்சக்கரவண்டி, வளர்ப்புநாய் உரிமம் பெறல்- 2012***

2012 ஆம் ஆண்டு துவிச்சக்கரவண்டி, வளர்ப்புநாய்களுக்கான உரிமத்தை பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

***03. வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்ட பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்***

03.01 வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள், கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதனை அறியத்தருகின்றேன். எனவே, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன்னனுமதி பெறப்படாது கட்டப்படும் கட்டடங்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

03.02 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

03.03 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

***04. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2012***

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2012 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2012 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தினை பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். உரிமப் பத்திரம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

***05. படவரைஞராக பதிவு செய்தல் - 2012***

2012 ஆம் ஆண்டு பட வரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்து கொள்ள அல்லது புதுப்பிக்க முடியும்.

***06. சூழல் பாதுகாப்பு உரிமம் -2012***

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டதத்துவங்களின் பயனைக் கொண்டு பிரதேசசபைக்கு வழங்கப்பட்ட குறிப்பிட்ட அதிகாரங்களின் கீழ் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.01.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை / தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு பிரதேசசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2012 ஆம் ஆண்டு தொழிலை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

***07. விளம்பரங்களை அமைத்தல்***

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொதுவீதிகள், பொது இடங்கள், வர்த்தக நிலையங்களில் பொருத்தப்படும், காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்காக 31.03.2012 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுப் கொள்கிறேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் /வர்த்தக நிலைய உரிமையாளர்கள் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 01.04.2012 இற்குப் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**திரு. அ.ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு**
**பிரதேசசபை.**

**வலிகாமம் தென்மேற்கு**
**பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(சி/5586)

# எலிசபெத்தின் வைரவிழா நினைவாக புதிய கப்பல் தயாரிக்க பிரிட்டன் முடிவு



பிரித்தானிய ராணி எலிசபெத்தின் வைர விழா நினைவாக ராணி பெயரில் புதிய கப்பலை தயாரித்து வழங்க பிரித்தானிய அரசு முடிவு செய்துள்ளது.

இக்கப்பல் தயாரிப்புக்கான செலவுகளுக்கு த டெய்லி மிரர் மெயில் மூலமாக பிரசாரம் தொடங்கியுள்ளது. இளவரசர் சார்லஸ் மற்றும் இளவரசி ஆனியின் ஆதரவும் இத்திட்டத்திற்கு உதவியாக உள்ளது.

உலகின் மிகப்பெரிய கப்பலாக 600 அடி நீளத்தில் உருவாக உள்ள இக்கப்பலின் கட்டுமான செலவுக்காக சுமார் 60 மில்லியன் பவுண்டுகள் தேவைப்படுகின்றது.

இந்தக் கப்பலில் அரச குடும்பத்தார்களின் பயன்பாட்டுக்காக தனி அறைகளும் இவை தவிர பெரிய கண்காட்சி அரங்கும் அமைக்கப் படவுள்ளது. மேலும் 220 நபர்கள் தங்கும் வகையில் அறைகளும் கட்டப்படவுள்ளன.

வர்த்தகம் மற்றும் தொழில் நிகழ்ச்சிகள் நடைபெறத் தேவையான வசதிகளை இக்கப்பல் கொண்டிருக்கும். இளைஞர்கள் அறிவியல் கல்வியும் பயிற்சியும் பெற உதவியாக விளங்கும்.

ஆனால் மக்களின் வரிப்பணம் இதற்காக செலவழிக்கப்படாது என்பதில் அரசு உறுதியாக உள்ளது.பிரித்தானியாவின் பெரும் பணக்காரர்கள் நிறுவனங்களிடம் அன்பளிப்பு வசூலிக்கப்படும் என்றும் கண்காட்சிகள் நடத்தி பொருள் திரட்டப்படும் எனவும் தகவல் வெளியாகி உள்ளது. (அ-2)

# இத்தாலியில் மோதிய கப்பலிலிருந்து 202 இந்தியர்கள் மீட்கப்பட்டனர்

## இந்திய தூதரக அதிகாரிகள் விரைவு

(ரோம்)

இத்தாலியில் பாறை மீது மோதி கவிழ்ந்த கப்பலில் இருந்து காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது. காணாமல் போனவர்கள் தொடர்பில் இந்தியரின் குடும்பத்தினர் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்த வேண்டும் என ஐ.நா. கூறியுள்ளது.

இத்தாலி தலைநகர் ரோம் அருகில் உள்ள கிக்லியோ போர்டோ தீவுக்கருகில் உள்ள பாறை மீது மோதி கோஸ்டா கான்கொரிடா என்ற ஆடம்பர சொகுசுக்கப்பல் கவிழ்ந்தது.

இந்நிலையில் இத்தாலி கடற்பரப்பு அதிகாரிகள் 29 பேர் காணாமல் போயுள்ளதாக நேற்றுமுன் தினம் அறிவித்தனர்.

கப்பலில் 2 ஆயிரத்து 300 தொன் எரிபொருள் இருந்தது. இவ் விபத்தால் அந்த எரிபொருள் கடலில் கலக்க நேரிடும் என இத்தாலி சுற்றுச்சூழல் அமைச்சகம் கவலை தெரிவித்துள்ளது.

கிக்லியோ போர்டோ தீவுக்கருகில் உள்ள கடற்பகுதி அரிய கடல்வாழ் உயிரினங்கள் நிறைந்த பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அப்பகுதியில் விரைவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்போவதாக இத்தாலி அரசு அறிவித்துள்ளது.

சம்பவ இடத்திற்கு ரோமில் உள்ள இந்திய தூதரக அதிகாரியை செல்லும் படி மத்திய அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா உத்தரவிட்டுள்ளார்.

கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 202 இந்தியர்களும் நேற்று முன் தினம் ரோமுக்கு பத்திரமாக கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு நாடு திரும்புவதற்கான தற்காலிக ஆவணங்களும் பணமும் கொடுப்பதற்கான ஏற்பாடுகளில் இந்தியத் தூதரகம் இறங்கியுள்ளது.


இது குறித்து அமைச்சர் கிருஷ்ணா விடுத்துள்ள அறிக்கையில், கப்பலில் இருந்த இந்தியப் பணியாளர்கள் மீட்கப்பட்டு விட்டனர். ஏனையோரை தேடுவதற்கு உதவி செய்வதற்காக இரு இந்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

கைதாகியுள்ள கப்பல் கப்டன், பிரான்சிஸ்கோ ஷெட்டினோ மீது கப்பல் சாயத் தொடங்கிய உடனேயே வெளியேறி விட்டார் என அரசு தரப்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அதை உறுதிப்படுத்தும் விதத்தில் கப்பலின் கறுப்புப் பெட்டியில் பதிவான உரையாடல்களை இத்தாலி பத்திரிகை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.


அதில் கப்டனுக்கும் மற்றொருவருக்கும் இடையில் நடந்த உரையாடல்கள், பயணிகள் வெளியேறும் முன்பே அவர்கள் வெளியேறி விட்டதை நிரூபிக்கின்றது. (அ-2)



இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாலஸ்தீன ஜனாதிபதி முகம்மது அப்பாஸ் (இடது) தலைநகர் லண்டனில் பிரதமர் டேவிட் கமரூனை சந்தித்து உரையாடுவதைப்படத்தில் காணலாம்.

# அமெ. ஆளில்லா உளவு விமானத்தை ஈரான் இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தினர்



(டெஹ்ரான்)

ஈரான் வான்எல்லைப்பகுதியில் அத்துமீறி நுழைந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் ஈரான் இராணுவத்தினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது.அந்த விமானத்தை போன்று மாதிரி பொம்மை விமானத்தை அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்க ஈரான் முடிபு செய்துள்ளது.

கடந்த டிசெம்பர் 5ஆம் திகதியன்று ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியையொட்டி உள்ள ஈரான் இராணுவமுகாம்களை வேவு பார்க்க அமெரிக்கா அனுப்பிய ஆர்-க்யூ-170 என்ற ஆளில்லா உளவு விமானம் ஈரான் இராணுவத்தினரால் சுட்டுவீழ்த்தப்பட்டது.

அந்த விமானம் தற்போது ஈரான் வசம் உள்ளது.

இதையறிந்த அமெரிக்கா அந்த ஆளில்லா உளவு விமானத்தை திருப்பிதர ஈரானுக்கு கோரிக்கை விடுத்தது.

இது குறித்து ஈரான் வானொலி வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது,

அமெரிக்கா திருப்பி கேட்ட உளவு விமானத்திற்கு பதிலாக பொம்மை விமானம் ஒன்றை அதே போன்று தயாரித்துள்ளோம். 30 செ.மீ நீளமும் 14 செ.மீ அகலமும் கொண்ட பொம்மை விமானம் 70 ஆயிரம் ரியால் மதிப்புள்ளது.

இந்தப் பொம்மை விமானத்தை எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி ஈரான் நாட்டின் இஸ்லாமிய குடியரசு தோன்றியதன் 34 ஆம் ஆண்டு விழா கொண்டாடப்படவுள்ளது.

அப்போது அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கவுள்ளோம் என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வெள்ளை மாளிகையில் திடீரென புகைமண்டலம்



அமெரிக்க ஜனாதிபதி மாளிகையான வெள்ளைமாளிகையில் இருந்து திடீரென புகை கிளம்பியது. இந்த புகை வெள்ளை மாளிகை சுற்றுச் சுவர் அருகேயிருந்து கிளம்பியது.

இதனையடுத்து வெள்ளை மாளிகை பூட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த புகை குண்டுவீசப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளை மாளிகைக்கு வெளியே ஆயிரக்கணக்கானோர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்கள் ஏதேனும் வீசியிருப்பார்கள் என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வோம்-அமெ.விற்கு இந்தியா பதில்

(புதுடில்லி)

ஈரான் நாட்டில் இருந்து தொடர்ந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் என்று அமெரிக்காவுக்கு இந்தியா பதில் அளித்துள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரித்து வருவதாக குற்றம்சாட்டி வரும் அமெரிக்கா, கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி அந்த நாட்டின் மீது புதிதாக பல்வேறு தடைகளை விதித்துள்ளது.

ஈரான் அரசின் மத்திய வங்கியுடன் பரிமாற்றம் செய்யும் வங்கிகள் உள்ளிட்ட நிதி அமைப்புக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதனால் ஈரானுக்கு எண்ணெய் இறக்குமதிக்காக பணம் கொடுப்பதில் இந்தியாவுக்கு சிக்கல் ஏற்படலாம் என கருதப்படுகிறது.

எனினும் ஈரானுடன் பரிமாற்றங்களை குறைத்துக்கொள்ளும் வெளிநாட்டு இறக்குமதியாளர்களுக்கு சலுகை அளிக்கவும் அமெரிக்கா முன்வந்துள்ளது.

இந்த சலுகைகளை கோரப்போவதில்லை என்று இந்தியா இப்போது அறிவித்துள்ளது.

ஐ.நா.சபையால் விதிக்கப்படும் பொருளாதாரத்தடைகளை மட்டுமே ஏற்றுக்கொள்வோம் என்று இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் ரஞ்சன் மாத்தய் கூறியுள்ளார்.

மேலும் தனி நாடுகளின் பொருளாதாரத்தடைகளை ஏற்று ஈரானுடன் செய்து கொண்ட எண்ணெய் இறக்குமதி ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் எண்ணெய் இறக்குமதியாளர்களுக்கு பலனளிக்கும் வகையில் அமெரிக்காவிடம் இருந்து எந்த சலுகையையும் இந்தியா எதிர்பார்க்கவில்லை என்றும் மத்தாய் தெரிவித்துள்ளார். (அ-2)

# வீடியோபடத்தில் டயானா உருவம்



சீனாவை சேர்ந்த எழுத்தாளர் மைக்கேல் ஜோகன் என்பவர் இங்கிலாந்தில் சுற்றுப்பணம் செய்தார். கிளாஸ்கோ நகரில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தை சுற்றிப் பார்த்து அங்குள்ள காட்சிகளை வீடியோ படம் பிடித்தார். ஆலயத்தில் உள்ள கண்ணாடி ஒன்றில் இளவரசி டயானா உருவம் தெரிவது போல பதிவாகி இருந்தது.

அவர் முதலில் வீடியோ படம் எடுக்கும் போது உருவம் கண்ணாடியில் தெரியவில்லை. ஆனால் வீடியோ படத்தை திருப்பி போட்டுப்பார்த்த போதுதான் அந்த உருவம் தெரிந்தது. இது டயானாவின் ஆவி படம் என்று அவர் கூறுகின்றார். இந்த படத்தை யார் வேண்டுமானாலும், ஆய்வுக்கு எடுத்து கொள்ளலாம் என்று அவர் கூறியுள்ளார். தற்போது கண்ணாடியை பார்க்கும் போது சாதாரணமாகவே தெரிகிறது. வீடியோவில் மட்டும் டயானா படம் தெரிந்தது எப்படி? என்பது மர்மமாக உள்ளது.(அ-2)

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்
இந்த நாட்டிலே!... – சினிமாப் பாடல்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை ஆர்கொலோ சதுரர்!

மணிவாசகரின் திருவாசகப் பெருமை உணராதார் தமிழராய் இருத்தல் உகந்ததன்று.

திருவாசகத்தின் பெருமை என்ற பொருளில் தனிநாயகம் அடிகளார் ஆற்றிய சிறப்புரை திருவாசகத்தின் இனிமையை இதர சமயத்தவர்களும் பருகுதல் வேண்டும் என்பதை உறுதி செய்கின்றது.

மணிவாசகரின் திருவாசகத்தில் ஒரு வரி ‘தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை ஆர்கொலோ சதுரர்’ என்பதாகும். நமக்கு மிகவும் பிடித்தமான வரிகள் இவை.

பிடித்தமைக்கு சிவன் மீது கொண்ட அளவு கடந்த அன்பு காரணமன்று. மாறாக மணிவாசகரின் அற்புதமான உளநிலைக் கருத்து என்பதால் அதன்மீது பற்று.

உன்னைத் தந்து என்னைக் கொண்டாய். இதில் ஆர் சதுரர் என்பது மணிவாசகரின் கேள்வி.

இந்தக் கேள்வியை நினைக்கும்போது இலங்கை–இந்திய அரசுகளின் நினைவு நம்மைத் தொட்டுக் கொள்ளும்.

வன்னிப் போரில் இலங்கை அரசுக்கு இந்திய அரசு தாராளமாக உதவியது.

நீ எது செய்தாலும் நாம் எந்தக் கேள்வியும் கேட்கமாட்டோம். ஆனால் கேள்வி கேட்பதுபோலவும் இலங்கைக்கு அவசரமாக வந்து போவது போலவும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தியது போன்றும் நடித்துக் கொள்வோம் என்பது இந்தியாவின் உத்தரவாதம்.

அதற்கேற்றவாறு இலங்கை அரசும் ஆமாம் போட்டுக் கொண்டது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் போர் நடந்த போது, சர்வதேச தொண்டு நிறுவனங்களை அரசு வெளியேற்றிய போது, அமைதியாக இருந்த இந்தியா, முட்கம்பி வேலிக்குள் தமிழ் மக்களை முடக்கியபோதும் மௌனமாகவே இருந்தது.

இப்போது இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா இலங்கைக்கு வந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசினார்.

13ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு அப்பால் சென்று தீர்வு காண்பதற்கு அரசு தயார் என ஜனாதிபதி, கிருஸ்ணாவிடம் தெரிவித்ததாகத் தகவல்.

ஐயா! இதைத்தானே அன்று முதல் இன்று வரை சொல்லிக் கொள்கிறீர்கள்–எப்போது இதைச் செய்வீர்கள்? இதற்கு ஒரு கால எல்லை இல்லையா? இப்படியேகூறிக்கொண்டுசென்றால், நிலைமை என்னவாவது? இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான கால எல்லை எதுவென்பதை எனக்கு சொல்லியாகுங்கள்.

இப்படி எஸ்.எம்.கிருஸ்ணா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் இதுபற்றி எதுவுமே கேட்க வில்லை.

மாறாக 13ஆவது திருத்தசட்டமூலத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படும் என்ற செய்திக்கு குட்...குட்.. வெரிக் குட் என்று சொல்லிவிட்டார்.

இங்குதான் மந்திரியாக இருந்த மணிவாசகரின் ‘தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை ஆர்கொலோ சதுரர்’ என்ற வாசகம் நெருடிக் கொள்கிறது.

அட, இலங்கை–இந்தியக் கூத்து. அந்த கூத்தபிரானின் கூத்தையும் விஞ்சிவிட்டது.

அப்பாவித் தமிழ் ஆன்மாக்கள் நம்பியிருக்கிறார்கள். இந்தியா வெட்டி விழுத்துமென்று.

மணிவாசகா! தமிழனை அழித்ததில் இந்தியாவா? இலங்கையா? ஆர்கொலோ சதுரர்

# தரவரிசைப்படுத்தல்களின்றி ரஷ்ய மொழிப் பரீட்சை முடிவு

## மேலுமொரு சர்ச்சையில் பரீட்சை திணைக்களம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறு தொடர்பாக பெரும் சர்ச்சை நிலவும் சூழ்நிலையில், ரஷ்ய மொழி பரீட்சைக்கான பெறுபேறுகளை மாவட்ட தேசிய ரீதியான தரவரிசை குறிப்பிடப்படாமல் பரீட்சைகள் திணைக்களம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

மேற்படி 36 மாணவர்களின் பெறுபேற்றை தரவரிசையுடன் வெளியிடுவதனால் அனைத்து மாணவர்களினதும் தரவரிசையில் மாற்றம் ஏற்படும் எனவும் இதனால் இசட் புள்ளிகளை மீள் மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கும் எனவும் பரீட்சைகள் திணைக்களத்தின் பாடசாலை பரீட்சைகள் பிரிவின் ஆணையாளர் எச்.ஜே.எம்.சி.ஏ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரஷ்ய மொழிப்பாடத்துக்கான பெறுபேறு தரவரிசை குறிப்பிடப்படாவிட்டாலும் முன்னர் வெளியிடப்பட்ட உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் மாவட்ட மற்றும் தேசிய ரீதியான தரவரிசை மாற்றமடையாமல் இருக்கும் என அவர் கூறினார்.

இதேவேளை பரீட்சைகள் திணைக்களத்தின் இந்நடவடிக்கையை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் விமர்சித்துள்ளார். இம்முறை உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் முற்றிலும் குளறுபடியானவை என்ற தமது நிலைப்பாட்டை பூரணப்படுத்தப்படாத இப் பெறுபேறு நிரூபிப்பதுவும் தாரா விஜேதிலக்க தலைமையிலான விசாரணைக்குழு வெறும் கண்துடைப்பே எனவும் அவர் கூறியுள்ளார். (அ–2)

# பெற்றோர்கள் பிள்ளைகளில் அதிக கவனம் எடுத்து செயற்பட வேண்டும்

## வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இன்றைய சமூகம் வித்தியாசமானதாகும். உலகம் திறந்து விடப்பட்டிருக்கின்றது. இதில் நிறைய தீய விடயங்கள் நடைபெறும் என்பதால் மாணவர்களை பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவதானிப்போடு வளர்க்க வேண்டுமென வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் ஒன்றிற்கான கால்கோள் விழாவும் தரம் இரண்டிற்கான பரிசளிப்பு விழாவும் சமையலறை திறப்பு விழாவும் நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஒரு மாணவனுக்கு நல்லதொரு குரு அமைந்தால் மட்டுமே எதிர்காலத்தில் அறிவாளிகளாக மிளிர முடியும்.

பாடசாலை ஆசிரியர்களே பிள்ளைகளுடன் அதிக நேரத்தை செலவழிக்கின்றனர். இதனால் பாடசாலை ஆசிரியர் மாணவர்களுக்கு சிறந்ததொரு எதிர்காலத்தை அவர்களின் பழக்கவழக்கங்கங்களினூடாக அமைத்து கொடுக்க முடியும்.

அனுபவமற்ற பிள்ளைகள் தான் பிறரிடம் இலகுவில் ஏமாறுகின்றனர். நல்லவர்கள் தீயவர்களை இனங்காண்பதற்கு அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகள் கதைப்பதற்கு, விளையாடுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

பெற்றோர்கள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு பிள்ளைகளினை படி என்று திணிக்காது பிள்ளைகளோடு இணைந்து செயற்பட வேண்டும். இன்று முக்கிய பிரச்சினையாக தீயவர்களின் கூட்டுச்சேர்க்கை காணப்படுகிறது. எனவே பெற்றோர் தமது பிள்ளைகளின் நண்பர்களை அறிந்து வைத்திருந்து அவர்களோடு பழகுதல் வேண்டும். இப்படியான நட்பினை பேணுவதன் மூலம் பிள்ளைகளை வளர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ–2)

# செவ்வாய் கிரகத்தில் இருந்து பூமியில் பாறைகள் விழுகின்றன

## விஞ்ஞானிகள் தெரிவிப்பு

செவ்வாய்க்கிரகத்தில் இருந்து பாறைகள்பூமியில்விழுவதாகவிஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

சமீபத்தில் மொராக்கோவில் 15 பவுண்ட் எடை உள்ள பாறைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை ஜூலை மாதம் செவ்வாய்க்கிரகத்தில் இருந்து விழுந்தவை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இது 5ஆவது முறையாக பூமியில் விழுந்துள்ளது.

இது இரசாயன ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. விண்கல் நிபுணர்கள், நாசா விஞ்ஞானிகள், அடங்கிய குழு இந்த பாறைகளை சோதனை செய்து விட்டு இது செவ்வாய்க்கிரகத்தில் இருந்து வந்தவைதான் என உறுதி செய்தனர்.

செவ்வாயில் மனிதன் வாழ சாத்தியம் உள்ளதா என ஆராய்ச்சி நடந்து வரும் நேரத்தில் செவ்வாய் பாறைகள் பூமியில் விழுகின்றது என்பது மிக முக்கிய திருப்பமாகும். (அ–2)


# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனம் வெவ்வேறு இடங்களில் இரு கிளைகளை ஒரே நாளில் திறக்கவுள்ளது.

இதற்கமைய சாவகச்சேரி கிளையின் திறப்பு விழா ஏ9 வீதி, சாவகச்சேரியில் இன்று வியாழக்கிழமை காலை 9.16 மணியளவிலும் முல்லைத்தீவு கிளையின் திறப்புவிழா பிற்பகல் 3.32 மணியளவில் நடைபெறவுள்ளதாக இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் ரி.ஏ.அஜித்குமார் அறிவித்துள்ளார். (அ)

# சத்திய தரிசனம்



## பக்தி என்றால் என்ன?

புத்தக அறிவு மட்டும் பயன்தராது. அது மேலோட்டமான அறிவு. ஆழ்ந்த பயன்தரக்கூடிய அறிவைத் தேடுங்கள். அதைக்கொண்டு புத்தியை வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

நல்ல எண்ணங்களை வளருங்கள். நல்லதையே பேசுங்கள், நல்ல செயல்களில் ஈடுபடுங்கள், பிறருக்கு உதவுங்கள், எப்போதும் யாரையும் புண்படுத்தாதீர்கள். அதுவே உண்மையான பக்தி. பிறருக்கு உதவாமல் வெறும் தியானம் மட்டும் இறைவனை அடைய முடியாது.

மனிதனிடம் தெய்வீகம் ஒற்றுமைதான் வெளிப்படும். மனிதசக்தி ஒற்றுமையில் தெய்வீகச் சக்தியாகிறது. பிரிவினையில் மிருக சக்தியாகிறது.

நமக்கு கிடைப்பதை பிறருக்கும் கொடுக்கப் பழக வேண்டும். பிறருக்கு கொடுக்கவே பகவான் செல்வத்தை கொடுத்திருக்கிறார் என்பதை உணர வேண்டும். தியாக உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். கிடைப்பதைக் கொடுங்கள். கிடைக்காவிட்டால் உங்களுடையதையே கொடுக்க முயலுங்கள். அதுவே தியாக உணர்வு. அதுவே உங்களை மேம்படுத்தும்.

# இயற்கையை தவிர என்னை யாராலும் சாய்க்க முடியாது

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

இயற்கையைத் தவிர என்னை யாராலும் சாய்க்கமுடியாது என தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறியுள்ளார். இது குறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

வெற்றி, தோல்வி மாறி மாறி வரக் கூடியவை. எம்.ஜி.ஆர். காலத்தில் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜெயலலிதா அ.தி.மு.கவுக்கு தலைமையேற்ற பின் 1996 மற்றும் 2006 இலும் சட்டசபை தேர்தல்களில் அ.தி.மு.க. படுதோல்விகளைச் சந்தித்துள்ளது. பர்கூர் தொகுதியில் ஜெயலலிதாவும் தோல்வியடைந்துள்ளார். எனவே. அ.தி.மு.கவை யாராலும் சாய்க்க முடியாது என ஜெயலலிதா கூறியிருப்பது உண்மைக்குப் புறம்பானது.

என்னை வேரோடு சாய்த்து விட்டேன் என்றும் அவர் கூறியுள்ளார். இயற்கையைத் தவிர என்னை யாராலும் சாய்க்க முடியாது. தீயசக்தி என்று ஜெயலலிதா என்னைக் குறிப்பிடுகிறார். அவருக்கு ஈ.வெ.ரா., அண்ணாதுரை மற்றும் எம்.ஜி.ஆர். ஆகியோர் என்னைப் பெருமைப்படுத்திக் கூறியவற்றை நினைவு கூறுகிறேன். எனவே, என்னைப் பற்றி ஜெயலலிதா கூறுவதை மக்கள் ஏற்க மாட்டார்கள்.



என் குடும்பம், என் மனைவி, என் மக்கள் என்று சுயநலமியாக நான் உள்ளேன் என ஜெயல்லிதா கூறியுள்ளார். ஆனால், எனக்கு எல்லாமே என் உடன்பிறவா தோழிதான் என கூறிவிட்டு கஷ்ட காலத்தில் எல்லாம் அவரோடு குடும்பம் நடத்தி விட்டுவாழ்வு வந்ததும் விரட்டியடிக்கும் சுயநலமி நான் அல்ல.

தானே புயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டு நாட்கள் காரில் சென்று ஆறுதல் கூறினேன். ஆனால், ஜெயலலிதாவை போல ஹெலிகொப்டரில் பயணம் செய்து பத்தரை நிமிடத்தில் நிகழ்ச்சியை முடித்து திரும்பவில்லை என அவர் கூறியுள்ளார். (அ-2)

# இந்திய-சீன எல்லைப் பகுதியில் அமைதியை உறுதி செய்ய ஒப்பந்தம் கைச்சாத்து

(புதுடில்லி)

இந்திய- சீன எல்லைப் பகுதியில் அமைதியை உறுதிசெய்யும் புதிய செயல்முறை ஒன்றை உருவாக்குவது என நேற்று முன்தினம் முடிவு செய்யப்பட்டது. இரு நாட்டு அதிகாரிகள் அளவிலான 15 ஆவது சுற்றுப் பேச்சில் இதற்கான முடிவு எட்டப்பட்டது.

இரு நாட்டு எல்லை விவகாரங்களில் ஆலோசனை மற்றும்ஒத்துழைப்புக்கான புதிய செயல்முறை ஒன்றை உருவாக்கும் ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது.இதில் சீனாவுக்கான இந்தியத் தூதர் எஸ்.ஜெயசங்கரும் சீனத் தரப்பில் அந்நாட்டு வெளியுறவுத்துறை துணையமைச்சர் லியுஷென்மினும் கையெழுத்திட்டனர்.

எல்லைப் புறங்களில் அமைதி மற்றும் சமாதானத்தை பாதிக்கும் வகையில் உருவாகும் விவகாரங்களை இந்த செயல்முறை அமைப்பு கவனிக்கும். இரு நாடுகளுக்கும் இடையே நட்பு நிலவ இந்த அமைப்பு துடிப்புடன் செயற்படும் என்று ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகளுக்கு இடையே ஒத்துழைப்பும் சுமுகமான சூழலும் நிலவ இந்த அமைப்பு வழிகாணும் எல்லைப் பகுதியில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான பல்வேறு சாத்தியக் கூறுகளையும் இந்த அமைப்பு ஆராயும். (அ-2)

# மும்பை தாக்குதல் மீதான விசாரணை ஒத்திவைப்பு

இந்தியாவில் மும்பையில் நடந்த தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானின் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கு மீதான விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு தொடர்பிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதைத் தொடர்ந்து பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஜக்கியூர் ரஹ்மான் லக்வி உட்பட 7 பேர் முக்கிய குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டனர். இவ்வழக்கு பாகிஸ்தான் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இவ்வழக்கு நீதிபதி ஷாகித் ரஃபிக் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது லக்வியின் சட்டத்தரணி குவாஜா சுல்தான் அகமது இறந்து விட்டதால் அவரது சார்பில் வேறு சட்டத்தரணி நியமிக்கப்படவுள்ளதால் அதுவரை விசார்ணையை தள்ளி வைக்க கோரிக்கை விடப்பட்டது.

இதைத் தொடர்ந்து மும்பை தாக்குதல் வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார். (அ-2)

# பாரதச் செய்திகள்

# தமிழக மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் எதனையும் நடத்தக்கூடாது

## இலங்கை அரசை வலியுறுத்தினார் கிருஷ்ணா

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்த கூடாது என்று இலங்கையிடம் இந்தியா கண்டிப்புடன் கூறியுள்ளது. இலங்கை ஜனாதிபதி மஹிந்தவிடம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இது குறித்து நேற்று முன்தினம் பேசியுள்ளார்.

அப்போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த, எஸ்.எம். கிருஷ்ணா ஆகிய இருவரும் மீனவர் பிரச்சினை குறித்து அவரிடம் விவாதித்தார்.

தமிழகத்தில் இருந்து கடலில் கச்சதீவு அருகே மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும் மீனவர்கள் எல்லை தாண்டி வருவதாக கூறி அவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து செல்கின்றனர்.


இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்புக்கு பின்னர் கிருஷ்ணா கூறியது. மீனவர்கள் பிரச்சினை மிகவும் உணர்வுபூர்வமானது. இதை இரு தரப்பினரும் மிகவும் கவனமாக கையாள வேண்டும்.

மீனவர் மீது எவ்விதமான தாக்குதலும் நடத்தக் கூடாது என்றும் அவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன். இந்த பிரச்சினையில் சுமுக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்வோம் என அவர் கூறினார். (அ-2)

# விர்ஜியா மாகாணத்தின் மேயராக இந்திய பிரஜை தெரிவாகினார்

(வோஷிங்டன்)



அமெரிக்காவின் விர்ஜினியா மாகாணத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற நகரமான சார்லொட்டஸ்வில்லே என்ற நகரத்தின் மேயராக இந்தியாவைச் சேர்ந்த சத்யேந்திர சிங் ஹுஜா என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1960 ஆம் ஆண்டு இவர் அமெரிக்காவில் குடியமர்ந்தார். தலைநகர் வோஷிங்டனில் இருந்து 193 கி.மீ. தென்மேற்கில் இந்த நகரம் உள்ளது. இங்கு மொத்தம் 43 ஆயிம் பேர் வசிக்கின்றனர்.

இவர் உத்தரகண்ட மாநிலத்தை சேர்ந்த சிங் விர்ஜினியா பல்கலைக்கழகத்தில் பேராசியராகப் பணியாற்றுகின்றார். அமெரிக்காவின் ஜனாதிபதிகளாக இருந்த தாமஸ் ஜெபர்சன், ஜேம்ஸ் மேடிசன், ஜேம்ஸ் மன்றோ ஆகிய மூவரும் இந்நகரை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாண்டுகால மேயர் பதவியில் நகர மேம்பாட்டிற்காக உழைக்கப் போவதாக சிங் உறுதியளித்துள்ளார். (அ-2)

## விண்ணைத் தாண்டி வருவாயா

# ஹோசன்னா பாடலுக்கு கிறிஸ்தவ அமைப்பு எதிர்ப்பு




விண்ணைத் தாண்டி வருவாயா படத்தில் ஏ.ஆர்.ரகுமான் இசையில் உருவான *ஹோசன்னா பாடல்* ரசிகர்கள் மத்தியில் பிரபலமானது. இப்படத்தை இந்தியில் ஏ.கே. திவானாதா என்ற பெயரில் கௌவுதமே இயக்குகிறார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வெளிவருகின்றது. ஹோசன்னா பாடலை இந்தி படத்திலும் ஏ.ஆர். ரகுமான் சேர்த்துள்ளார். இப்பாடலுக்கு அங்குள்ள கிறிஸ்தவ அமைப்புக்கள் எதிர்ப்பு தெரிவித்து உள்ளன.


ஹோசன்னா என்பது கிறிஸ்தவர்களின் வழிபாட்டுக்குரிய வார்த்தையாகும். அதனை காதல் பாடலில் இடம்பெறச் செய்தது கண்டிக்கத்தக்கது.

இதற்காக ஏ.ஆர்.ரகுமான் வருத்தம் தெரிவிக்க வேண்டும். பாடலில் இருந்து ஹோசன்னா வார்த்தைகளையும் நீக்க வேண்டும்.

இல்லாவிட்டால் போராட்டம் நடத்துவோம். நீதிமன்றில் வழக்கு தொடருவோம் என்று கத்தோலிக்க கிறிஸ்தவ அமைப்பு அறிவித்துள்ளது. (அ-2)



தலைநகர் டில்லியில் பி.ஜே.பி. கட்சியின் தலைவர் நிதின் கட்காரியை நோபாள துணை பிரதமர் பிஜாயா குமார் கடசாதர் சந்தித்த போது பூச்செண்டு வழங்கி வரவேற்பதைப் படத்தில் காணலாம்.



கொமஷல் லீசிங் அன் பினான்ஸ் நிறுவனத்தின் 50ஆவது கிளை நேற்று கிளிநொச்சியில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்வில் அதிதிகள் அழைத்துவரப்படுவதையும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வாடிக்கையாளர் ஒருவருக்கு வங்கியின் உதவித்திட்டம் ஒன்றை வழங்கி வைப்பதையும் ஆளுநர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-எம்.கௌரிகாந்த்)

## அவசரமாக திரும்பினார் அமைச்சர் பஷில்

(யாழ்ப்பாணம்)

இந்திய அமைச்சின் நிதியுதவியுடன் நடைபெற்ற துவிச்சக்கரவண்டிகள் கையளிக்கும் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ பங்கேற்காது அவசரமாக கொழும்புக்குத் திரும்பினார். நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா நாவலடியில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளை அதன் பயனாளிகளிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வு முடிபடைந்ததும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சீர் பஷில் ராஜபக்ஷ தவிர்ந்த ஏனையவர்கள் யாழ். பொது நூலகத்திற்கு முன்பாக நடைபெற்ற துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வில் பங்கு பற்றியிருந்தனர். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தவிர்க்க முடியாத காரணத்தால் உடனடியாக கொழும்பு செல்ல வேண்டியிருந்ததனால் இந்த நிகழ்வில் பங்குபற்றவில்லை என தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வை ஏற்றுக் கொள்ளத் தயார்!

### கிருஸ்ணாவிடம் உறுதியளித்தார் ரணில்

(கொழும்பு)

அரசியல் அமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் இன நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது முக்கியமாக ஆராயப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை கொழும்புவந்த இந்திய வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சிக்களின்போது அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை என்பன தொடர்பாகவே முக்கியமாக ஆராயப்பட்டன.

அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அதற்கும் மேலாக சென்று பிரச்சினைக்கு தீர்வைக்காண்பதற்கு தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் உறுதியளித்திருக்கும்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுடனும் அது தொடர்பாக இந்திய அமைச்சர் பேச்சுக்களை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் இன நெருக்கடிக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி ஏற்கெனவே வெளிப்படுத்தியிருந்தது.

இந் நிலையில் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாக ரணில் பேச்சுக்களின் போது தெரியப்படுத்தியிருப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் அலுவலக வட்டாரங்கள் குறிப்பிட்டன. (எ-5)


**University of Jaffna - Sri Lanka**

**Faculty of Graduate Studies**

**Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL) 2012/2014 (Batch I)**

Applications are invited from eligible candidates for admission to the **Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL)** for the academic year 2012/2014

**Admission Requirements:**

1. Degree in any field from a recognized University.

And

2. At least three years experience in Teaching English as a Second Language at primary/secondary/tertiary levels in Government or recognized private schools/ Institutions.

And

3. Age - below fifty five years

**Duration of the Course :** Four Semesters ( Approximately Two years)

**Medium of instruction :** English

**Selection Criteria :** Written Examination and Viva voce.

Written Examination - Title of the paper **"English Language Proficiency"** (02 hours) The paper will check the candidate's basic ability in reading and writing skills

Viva voce - Candidates are expected to prove their basic oral proficiency in English.

● 35 Candidates will be selected based on their overall performance

**Course Fee: Rs. 37,700.00**

**Closing date for Applications :** 17th February, 2012.

**Application Procedure:**

Application forms and other details could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna either in person or by post on a payment of Rs.300/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope (Rs. 5/-) 23cm x 10cm in size.

Duly completed applications should be forwarded to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna on or before the closing date of application.

Illegible, incomplete and late applications will be rejected without intimation.

**Registrar**

**17.01.2012**

(C-5589)


## அரசாங்கத்தின் முடிபை பாராட்ட வேண்டும்!

### பிரபா கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தயார் என்று ஜனாதிபதி உறுதியளித் திருப்பதை கட்சி பேதமின்றி அனைத்து தமிழ்க்கட்சித்தலைவர்களும் பாராட்டவேண்டும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு வருடகாலமாக அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் ஏற்பட்டுவந்த பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அதேநேரம் 13வது திருத்த சட்டத்திற்கமைய அரசியல் அமைப்பில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாதென அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்திருந்தது.

ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகைக்குப் பின்னர் நிலைமை அடியோடு மாறி 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் தீர்வுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ்க் கூட்டமைப்பு உட்பட இலங்கையிலுள்ள அனைத்து தமிழ்க்கட்சித் தலைவர்களும், புலம்பெயர்ந்தவர்களும் புத்திஜீவிகளும் தமிழ் அமைப்புகளும் ஒருமித்தகுரலாக ஜனாதிபதிக்கு பாராட்டு தெரிவிக்க வேண்டும். முடியுமானால் பட்டாசுகளை கொளுத்தி தமது சந்தோஷத்தை தமிழ்மக்கள் வெளிப்படுத்த வேண்டும்.

இப்படியான செயல்பாடுகள் மூலம் தான் அரசாங்கம் தனது வாக் குறுதியிலிருந்து மீளமுடியாத நிலைக்கு தள்ளப்படும். இதுவே சாணக்கியமும் விவேகமும் கொண்ட செயல்பாடாகும்.

அனைத்துத் தரப்பிலும் அரசாங்கத்தின் இந்த வாக்குறுதிக்கு வரவேற்பு அதிகரிக்கும் பொழுது ஒரு போதும் அரசாங்கம் இவ்வாக்குறுதியிலிருந்து மீளமுடியாமல் கட்டுண்டிருக்கும் நிலைமைக்கு தள்ளப்படும்.

வெறுமனே இத்தருணத்தில் அரசாங்கத்தை நம்பமுடியாதென்று அறிக்கைகள் விடுவதன் மூலம் வாக்குறுதியிலிருந்து அரசாங்கம் தப்பிவிடுவதற்கு சந்தர்ப்பத்தை நாமே வழிவகுப்பதாக அமைந்துவிடும்.

இத்தருணத்தை பற்றிப்பிடித்து எமது தீர்வைப்பெற வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம் இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத் தெரிவிக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடனடியாக பங்குபற்றுமுகமாக உறுப்பினர்களை நியமிக்கவேண்டும்.

காலம் தாழ்த்தும் பொழுது அது அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதற்கு ஏதுவாக அமைந்துவிடும்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதன் மூலம் உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடிய தீர்வுகளை வலியுறுத்துவதற்கும் கூட்டமைப்பினருக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்றார். (ஏ)

# அதிகாரப் பரவலாக்...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாணத்தில் யாழ்ப்பாணத்திற்குக் கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வந்தேன்.

இந்தப் பகுதி மக்கள் கடந்த கால யுத்தத்தால் பல அழிவுகளைச் சந்தித்து இருக்கின்றார்கள். பல துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள். ஆனால் இன்று அமைதி காணப்படுகின்றது.

வட மாகாண மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை இந்திய அரசாங்கம் நன்கறியும். உங்களுக்கு உரித்தானது என்ன என்பதையும் இந்திய அரசாங்கம் நன்கு அறிந்து வைத்திருக்கின்றது.

ஒரு நெருங்கிய நண்பன் என்ற வகையிலும் அயல்நாடு என்ற ரீதியிலும் இலங்கைக்கு எம்மால் இயன்றவரை உதவிகள் வழங்கி வருகின்றோம்.

எனது இந்த விஜயத்தின்போது இடம்பெயர்ந்த மக்களோடும் தொடர்பு கொண்டு அவர்களுடைய பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாகவும் நன்கு அறிந்து கொண்டுள்ளேன்.

அந்த மக்களின் மீள்குடியேற்றத்தினை விரைவுபடுத்தும் நோக்குடன் வீடமைப்புத் திட்டத்தினை ஆரம்பித்தோம். அத்தோடு மீள்குடியேறும் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் தேவையான உதவிகளையும் வழங்கி வருகின்றோம்.

கடனுதவிகள் வழங்குவதற்கும் இந்திய அரசானது முன்வந்துள்ளது. சொந்த இடங்களை விட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிவரும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு 270 மில்லியன் அமெரிக்க டொலரை மத்திய வங்கியின் ஊடாக ஒதுக்கியுள்ளது.

மேலும் இலங்கையில் தொடர்ந்தும் இழுபறிபட்டுவரும் இனப்பிரச்சினையையும் சமூகங்களுக்கிடையிலான முறுகல்களையும் உடன் தீர்த்துவைப்பதில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மிகுந்த அக்கறை எடுத்து வருகின்றார்.

இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பொதுவான அடிப்படை அரசியல் உரிமைகளை வழங்கும் அதிகாரப் பரவலாக்கல் முறையே பொருத்தமானது என இந்தியா கருதுகின்றது.

எனவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் முறை ஏற்றதென எனது இந்த இலங்கை விஜயத்தின்போது எடுத்துக் கூறியுள்ளேன். 270 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வீடமைப்புத் திட்டத்தினை மேற் கொள்வதற்கு நிதி ஒதுக்கியிருக்கின்றோம். இந்நிதி மூலம் 49 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து வருகின்றோம்.

அத்தோடு இந்த வீடுகளின் பயனாளிகள் தெரிவில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றோம். எதிர்வரும் காலங்களிலும் இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் கூடுதலான கவனம் செலுத்தவிருக்கின்றோம்.

இன்று (நேற்று) 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் இந்திய அரசினால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய அரசின் நிதியுதவியுடன் அரியாலையில் அமைக்கப்பட்ட வீடுகளையும் அதன் பயனாளிகளிடம் எஸ்.எம்.கிருஸ்ணா வழங்கினார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தின்போது இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் யாழ்.அலுவலகத்தின் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாணத்தின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-6)


வாடகைக்கு வீடு உடன் தேவை
ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், மானிப்பாய், கோப்பாய், சுன்னாகம், உடுப்பிராய் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதியோரின் வீடு ஒன்று உடன் வாடகைக்குத் தேவை
தொடர்புகளுக்கு - 0772999699

A/L DAY CLASS
தமிழ்
சந்திரலிங்கம்
நேர அட்டவணை அலுவலகத்தில்
DCM (வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)

A/L 2012
DAY CLASS
வர்த்தகப் பிரிவு
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
7.30 am - 1.30 pm
DCM (வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)

அவுஸ்திரேலியா குடும்ப விசா
அவுஸ்திரேலியா குடும்பத்துடன் 5 வருட கால விசாவிற்கு இலவச சட்ட ஆலோசனை
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016

(7323)



பகிரங்கக் கலந்துரையாடல்
உயர்கல்வியில் எதிர்நோக்கும் சமகால நெருக்கடிகளும், பல்கலைக்கழக புதுமுக மாணவர்களும்
தலைமை:- பேராசிரியர் ப. சிவநாதன் (பதில் பீடாதிபதி, கலைப்பீடம்)
2011 க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளும் Z - புள்ளி கணிப்பீட்டு முறையும்
ஆரம்ப உரை:- கலாநிதி செ. அறிவழகன் (கணித புள்ளிவிபரவியல் துறை)
தனியார் பல்கலைக்கழக சட்ட மூலம்
ஆரம்ப உரை:- திரு.கு. குருபரன் (சட்டத்துறை)
காலம்:- 20.01.2012 (வெள்ளிக்கிழமை)
நேரம்:- மாலை 3.30 மணி
இடம்:- கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்
அனைவரையும் வரவேற்கின்றோம்.
குறிப்பு:- க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.
யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம்
(7320)


# பேச்சு மூலமான...

அதுகூட்டுக்குறிப்பு ஒன்றுபதிவு செய்யப்பட்டு அந்த பதிவுகளின் அடிப்படையில் தான் நாங்கள் செயற்பட்டுக் கொண்டு வருகின்றோம். எங்களைப் பொறுத்தவரை ஜனாதிபதியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு மாறாக நாங்கள் எதையும் செய்யவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெறுகின்ற பேச்சுவார்த்தை தொடர வேண்டும். அத்துடன் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஊடாகவும் தீர்வு காணப்படவேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். அதன் அடிப்படையில் பேசித்தீர்க்க வேண்டிய கடமைப்பாடு அரசாங்கத்திற்கு இருக்கின்றது. எம்மைப் பொறுத்தவரை அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

எங்கள் நிலைமை தெரிந்த விடயம். அதைப்பற்றி அதிகம் பேச வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் ஏன் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு போகச் சம்மதிக்கவில்லை என அரசுக்கு தெட்டத்தெளிவாக கூறியிருக்கின்றோம். நாங்கள் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இந்த கருத்தை தெளிவாக கூறியிருக்கின்றோம்.

பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வையே நாம் காண விரும்புகின்றோம். ஆனால் அதே சமயத்தில் அது முறையாக நடைபெறவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். இதைப்பற்றி தற்போது அதிகம் பேசுவது பொருத்தமானதாக நினைக்கவில்லை என்றார். (எ-11)

# 13ஆவது...

இடம்பெற்றுள்ள வெவ்வேறு கட்சிகள் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பில் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டுவருகின்றன. அதேவேளையில் அரசாங்கமும் அரசியல் தீர்வு தொடர்பில் முரண்பாடான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார். (எ-5)

# சுஸ்மா...

னும் இந்திய மாநில சட்டமன்ற தேர்தல் நிறைவுற்றதன் பின் சுஸ்மா சுவராஜ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் இலங்கை வருவார் என கிருஸ்ணா குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் பாரதிய ஜனதா கட்சி மற்றும் சுஸ்மா சுவராஜ் ஆகியோர் தமது தமிழ்நாட்டு விஜயத்தின்போது அதிக கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு உபகரணங்கள் கையளிப்பு

கிளிநொச்சிக்கு நேற்று காலை விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சென்று அங்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட ரூ.29 மில்லியன் பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்களை கையளித்திர். (ச-5)

# அரசு-...

கொடுக்கவில்லை. 30 ஆண்டு கால உள்நாட்டு யுத்தத்தின் பின்னரும், பெரும்பான்மையைக் கொண்ட இலங்கை அரசு மத்தியில் இருந்து தமது அதிகாரங்களை வழங்க தயாராக இல்லை.

எனவே இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் வழி இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றிற்கு வழி செய்யும்படி இந்திய அரசை விநயமாக வேண்டுகின்றோம். இல்லாவிடின் இப் பேச்சுக்கள் நீண்டு கொண்டே போவதோடு இலங்கை அரசானது புதிய வழிகளைத் தேடி அரசியல்பிரச்சினைக்கு தீர்வினைக் காணும் எண்ணத்தைபின்தள்ளிக்கொண்டே போகும்.

எனவே இந்திய அரசானது புவியியல் நோக்கங்களையும் தாண்டி உண்மையாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண உழைக்க வேண்டும். இலங்கை அரசானது இந்திய அரசு பேச்சுக்களின்போது மத்தியஸ்தம் வகிப்பதை எதிர்க்கப் போவதில்லை. இந்திய சமாதான உடன்படிக்கை வழி முன்பு இந்திய அரசு இது போன்ற மத்தியஸ்த பணியை ஆற்றியபோதும் தமிழ் தலைவர்கள் இந்திய சமாதான ஒப்பந்தத்தின் தன்மைகளை உணராமலும் தமக்குள் கெட்டித்தனமாக ஒன்றிணைந்து செயல்படாமலும் தூக்கி எறிந்து விட்டனர்.

எனவே இந்திய வெளிவிவகார அமைச்சானது இந்த சந்தர்ப்பத்தை தவறவிடாமல் எமது வேண்டுகோளை பரிசீலித்து எமது உதவிக்கு வரும்படி அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றம் செய்யப்படுகின்ற மக்கள் மேல் தாங்கள் காட்டும் மனிதாபிமான கரிசனைக்கு நன்றி தெரிவிக்கிறோம் என்றுள்ளது. (எ)

# யாழ்ப்பாண...

கட்டிட வடிவமைப்பாளர் மதுரா பிரேமதிலக்க சமர்ப்பித்த வடிவமைப்பு இதில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. சிந்தியா அன்ட் அதுல ரணசிங்க சார்டர்ட் ஆர்கிடெக்ஸ் நிறுவனம் சமர்ப்பித்த வடிவமைப்பு இரண்டாமிடத்தையும் டிசைன் கொன்சோர்ட்டியம் நிறுவனம் சமர்ப்பித்த வடிவமைப்பு மூன்றாமிடத்தையும் பெற்றன.

இப்போட்டிக்கு மொத்தமாக 29 வடிவமைப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. முதலிடம் பெற்ற வடிவமைப்புக்கு 3 500 அமெரிக்க டொலர்களும் இரண்டாமிடத்திற்கான வடிவமைப்புக்கு மூவாயிரம் அமெரிக்க டொலர்களும் மூன்றாமிடத்திற்கான வடிவமைப்புக்கு 2500 டொலர்களும் பரிசாக வழங்கப்பட்டன. (ச-5)

# கூட்டமைப்...

என்று கூறியுள்ளது.

தெரிவுக்குழுவுக்கு பெயர்களை பரிந்துரைக்கும் வரை அரசாங்கம் கூட்டமைப்புடன் எந்த இடத்திலும் பேச்சுக்களை நடத்தப்போவதில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. முன்னதாக நேற்று முன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து பங்கேற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை நிறுத்தவில்லை, இது தொடர்ந்தும் நடைபெறும் என்றும் கூறியிருந்தார். பேச்சுக்களை நடத்தும் அதேவேளை கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## யோகமணி வேலாயுதபிள்ளை

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட யோகமணி வேலாயுதபிள்ளை நேற்று 18.01.2012 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், பாலேந்திரா இடைக்காடர் (France) இன் அன்பு தாயாரும், இந்துமதியின்(France) மாமியாரும்,

காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சரஸ்வதி மற்றும் வடிவாம்பாள்(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

61, அம்பலவாணர் வீதி,
அத்தியடி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-5592)


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவு ஆரம்பம் - 19.01.2012 (வியாழன் - இன்று)
NSB அருகில் கொடிகாமம் வீதி நெல்லியடி காலை 9.00 - 10.00
நகரசபை அருகில் ஸ்ரேசன் வீதி சாவகச்சேரி மாலை 4.00 - 5.00
சனி, ஞாயிறு புதிய பிரிவுகளும் ஆரம்பம் (21.02.2012)
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி காலை 8.00 - 9.00
நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி 10.00 - 11.00
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் காலை 2.00 - 3.00
இலங்கை வங்கி மேல்மாடி, சங்கானை 4.00 - 5.00
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.